விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 16 புதன்கிழமை (29.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 0100

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-7932)

## மன்னாரில் பட்டதாரிகள் நேற்று போராட்டம்



24

## 110 மாணவர்கள் 9ஏ சித்தி யாழ். கல்வி வலயம் சாதனை

### வேம்படி மகளிர் கல்லூரியில் 52 பேர் 9ஏ; 56 பேர் 8ஏ

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் மகத்தான சாதனை படைத்துள்ளது.

110 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் "ஏ" சித்திபெற்றுள்ளனர். இதில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் 52 மாணவர்கள் 9ஏ சித்தியும், 56 மாணவர்கள் 8 ஏ சித்தியும் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்த 23

## கஞ்சா செடி; இருவர் கைது

(வட்டவளை)

வட்டவளைப்பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா செடியை வளர்த்து வந்த சந்தேக நபர்கள் இருவர் நேற் 24

## யாழ்.இந்து மாணவன் அபிநந்தன் சாதனை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் அருளானந்தம் அபிநந்தன் அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தையும் தமிழ் மொழி மூலத்தில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் 23

# சர்வதேச விசாரணை சாத்தியப்படவிடோம்!

## உள்ளக ரீதியில் அனைத்தையும் முடிக்கத் தயார் – மங்கள



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நடத்த இடமளிக்கப்படமாட்டாது என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டு வரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் தமது உள்ளக விசாரணைப் பொறிமுறையில் நிச்சயம் கலந்து கொள்ள வைப்போம் என்றும் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம்)

## துன்னாலையில் வாள்வெட்டு!

### இருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இடம்பெற்ற வாள்வெட்டிற்கு இலக்கான மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் 23

## 27 பவுண் தங்க நகை கொள்ளை

(சாவகச்சேரி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கு பகுதியில் நேற்று அதிகாலை தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் வழமை போன்று 23

## அனலைதீவு சதாசிவம் ம.வி சாதனை!

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகளில் அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். 23 மாணவர்கள் தோற்றிய 23

## அச்சுவேலி முக்கொலை வழக்கு

## கொலைச் சந்தேக நபரான தந்தையை சந்திக்கும் மகன்!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி முக்கொலை வழக்கின் தொடர் விசாரணை இரண்டாவது நாளாக நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றது.


இவ் வழக்கின் எதிரியான பொன்னம்பலம் தனஞ்சயன், குறித்த வழக்கு ஆரம்பித்த நாளில் இருந்து தனது மகனை தன் கண்முன் காட்டுமாறு நீதிபதியிடம் கோரியிருந்தார்.

அவரின் கோரிக்கைக்கு அமைய இன்றைய தினம் குறித்த எதிரியின் மகனை அவர் முன் காட்டுமாறு எதிரியின் மனைவியிடம் நீதிபதி அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலிப் பகுதியில் வசித்து வந்த பொன்னம்பலம் தனஞ்சயன் என்பவர் கடந்த 2014 அம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி தனது தனது மனைவியின் உறவினர் 04

## தீர்மானங்களால் என்ன முன்னேற்றம்?

### ஐ.நா கண்காணிக்க வேண்டும் – விக்கி



(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனிதவுரிமை பேரவையில் 2015-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், தீர்மானங்களை நிறைவேற்றுவதில் என்ன முன்னேற்றம் உள்ளது என ஒவ்வொரு மாதமும் ஐக்கிய நாடுகள் சபை கண்காணிக்க வேண்டும் என ஐ.நாவிடம் 23

## குடிவரவு குடியகல்வு சட்டத்தில் மாற்றம்!

(கொழும்பு)

சர்வதேச சூழல் மற்றும் இலங்கையின் முன்னுரிமைகள் என்பதற்கமைவாக புதிய குடிவரவு குடியகல்வு சட்டமூலங்களை அரசாங்கம் தயாரித்து வருகின்றது.

அதேவேளை இலங்கையர்கள் நாட்டை விட்டு பயணம் மேற்கொள்கின் 23




கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

13.03.2017 திங்கட்கிழமையன்று ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்பட்ட வெளிநாடு செல்பவர்களுக்கான A1 பரீட்சையில் எமது நிறுவனத்தின் ஊடாக அதிகூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களை புகைப்படத்தில் காணலாம்.
- புள்ளிகளின் விபரம் 60-90 வரையான புள்ளிகள் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள்.
- ஒவ்வொரு பரீட்சையிலும் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்து வெளிநாடு சென்றுள்ளார்கள்.
- கோணேஸ்வரனின் வழிகாட்டலில் ஜேர்மன் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் அரச அங்கீகாரம் பெற்றது. எமது நிறுவனம் ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணத்தில் மட்டுமே இயங்குகின்றது.

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
தொ.பே : 0779707322 ஆரியகுளம் சந்தி (புத்த விகாரைக்கு எதிரே 2-ம் மாடி) யாழ்ப்பாணம்.
(8434)

# சிறுமி மீது துஷ்பிரயோகம் இளைஞருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

தொண்டைமானாறு பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதவான் நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

மேற்படிப் பகுதியில் உள்ள 14 வயது சிறுமியை 24 வயது இளைஞன் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞரை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (செ-60)

# வடக்கு பட்டதாரிகளின் கவனயீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் தமக்கான அரச வேலை கோரி வட மாகாணத்தில் உள்ள 5 மாவட்ட செயலகங்களின் முன்பாகவும் நாளை காலை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாக வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,


வட மாகாண முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க வேலையற்ற பட்டதாரிகளின் தரவுகள் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் செயலகத்தில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மத்திய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கு இவ்வாய்ப்பை பயன்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது.

தொடர்ச்சியாக எமது கோரிக்கைகளுக்கு விரைவான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என பட்டதாரிகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

கைநிறைய சம்பாதிக்க கௌரவமான
தொழில் வேண்டுமா?
யாழ் - கொழும்பு - வெளிநாடுகளில் ஆயிரக்கணக்கான
ஹொட்டேல் வேலைவாய்ப்புகளைப் பெற



SIKARAM HOTEL SCHOOL



O/L உடன் துறைசார் பயிற்சிபெற்று உலகப் பிரசித்திபெற்ற Sheraton Hotels வலைப்பின்னலில் 30 ஆண்டுகளுக்கு மேலாக உயர் பதவி வகித்த யாழ் மண்ணின் மைந்தன்
விக்கி சுப்பிரமணியம்
கிறிஸ்ரோஃபர் பொன்னுத்துரை — General Manager - Jetwing Hotel
கார்த்திகன் — General Manager - Green Grass
ஆகியோருடன், முன்னணி ஹொட்டேல் உரிமையாளர்கள்
மற்றும்
கற்கைநெறியை நிறைவுசெய்து சிறப்பான பணிக்காக சான்றிதழ் பெறும் 30 மாணவர்களையும் நேரில் சந்தித்து
வேலைவாய்ப்புடன் கூடிய கற்கைநெறியில் இணையுங்கள்
O/L உடன் Diploma in Tourism & Hotel Management
with 3 Months FREE ENGLISH COURSE
முதல் மாதத்திலிருந்தே வருமானத்துடன் தொழில்!
3 - 6 மாதத்தில் நட்சத்திர விடுதிகளில் வேலைவாய்ப்பு!
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
பிரவேசம் இலவசம்
31-03-2017 வெள்ளி காலை 10 மணி
ஞானம்ஸ் ஹொட்டேல்,
299, 301 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
முற்பதிவு அவசியம்
077 36 16 798
பெற்றோரும் கலந்துகொண்டு விளக்கங்களைப் பெறலாம்
இல.175, 1ம் குறுக்குத் தெரு, (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்
(C-7945)

## RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy


☏: 021 226 3321 ✉: info@raveensemc.com Web: www.raveensemc.com

Mr. P. Easwaranathan B.Sc (Hons) Ag. Dip. in. Edu.
Justice of the Peace
Director

### G.C.E O/L EXAMINATION RESULT – 2016 Dec

| Name | Mat (Eng) | Eng | Sci (Eng) | Hist | Tam | Reli | Com (Tam) | Ict (Eng) | Eng. lit | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. N.Vithushan | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 2. N.Ramanan | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 3. K.Malanpan | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 4. V.Anushan | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 5. Y.Shampavi | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 6. T.Mithura | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 7. A.Anoshan | A | A | A | A | A | A | A | A | B | 8AB |
| 8. S.Sivanthini | A | A | A | A | A | A | A | A | B | 8AB |
| 9. P.Panuja | A | A | A | A | A | A | A | A | B | 8AB |
| 10.P.Viththaky | A | A | A | A | A | A | A | A | B | 8AB |
| 11.V.Ahryraj | A | A | A | A | A | A | A | A | B | 8AB |
| 12.V.Umaibalan | A | A | A | A | B | A | A | A | A | 8AB |
| 13.L.Sivakanth | A | A | A | A | A | A | A | A | C | 8AC |
| 14.J.Jenoshan | A | A | A | A | A | A | A | A | C | 8AC |
| 15.P.Kopika | A | A | B | A | A | A | A | A | B | 7A2B |
| 16.V.Mathiveni | A | A | A | A | B | A | A | A | C | 7ABC |
| 17.P.Kajanth | A | A | A | A | B | A | A | A | C | 7ABC |
| 18.V.Haryraj | A | A | A | A | A | A | B | A | C | 7ABC |
| 19.A.vathavooran | A | A | A | A | C | A | B | A | A | 7ABC |
| 20.P.Kishani | A | A | B | B | A | A | A | B | C | 5A3BC |
| 21.S.Kasthuri | A | A | C | A | B | A | B | A | C | 5A2B2C |
| 22.J.Kavithan | A | B | B | A | B | A | B | A | C | 4A4BC |
| 23.K.Kopika | A | A | B | B | C | A | C | A | C | 4A2B3C |
| 24.B.Arudgadadsan | A | A | B | A | B | B | B | B | C | 3A5BC |
| 25.K.Nithursha | B | B | C | A | B | A | C | A | S | 3A3B 2CS |

காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
புரவலர் கலைமாடக்கோன்
சண்முகம் சிவஞானம்
அவர்களின்
மணிவிழா



இடம்:
கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம்:
02.04.2017 ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றத்தினர்
காரைநகர்
(C-7941)

## 31ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 1947 - 02 - 02

மறைவு 2017 - 02 - 26

## அமரர் குமாரவேலு நாகம்மா

ஆயிரம் சுமை தாங்கி – எமை
ஆளாக்கிய அன்னை எமை
மீளாத்துயரில் ஆழ்த்தி மீண்டதேனோ!
மாளாதவர் மண்ணில் யாருமில்லை – என
வாழ விளைகின்றோம்

அம்மா உங்கள் ஆத்மா சாந்திக்காய் இறைவனை வேண்டி நிற்பதோடு; எமது அன்னையின் இழப்பையிட்டு வைத்தியசாலை தொடக்கம் இன்றுவரை எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நாம் சோர்ந்து நின்றபோது ஆறுதல்படுத்திய அன்பான உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் மற்றும் தாயகத்திலிருந்து புலம்பெயர் தேசங்களிலிருந்தும் தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்த அனைத்து உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் பொதுநல சேவையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு தங்களின் ஆறுதலால் பலமடைந்த நாம் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் இறைவன் நல்லருள் புரிய வேண்டுகின்றோம்.

(C-7944)

இவ்வண்ணம் கு. பகீரதன்
கு. பார்த்தீபன்

# போரில் ஆங்காங்கே குற்றங்கள் நிகழ்ந்தன

## நான் நிராகரிக்கவில்லை-கோத்தபாய ஒப்புதல்

(கொழும்பு)

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு புதிய விசாரணைப் பொறிமுறைகள் தேவையில்லை. தற்போதுள்ள நீதிப் பொறிமுறைகளே போதுமானது எனவும் போரின் போது ஆங்காங்கே சில குற்றச்செயல்கள் நிகழ்ந்தன என்பதை நான் நிராகரிக்கவில்லை என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒப்புக்கொண்டார்.



வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை நேற்று கோல்பேஸ் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

அரசியலில் நுழைவதற்கு விரும்பாவிடினும், நாட்டுக்குச் சேவையாற்றும் வாய்ப்பை நிராகரிக்கமாட்டேன்.

நான் ஒரு நல்ல அரசியல்வாதியாக இருப்பேன் என்பது நிச்சயமில்லை. ஆனால், அரசியலை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி எப்போதும் கூறுவார்.

எனது கொள்கைக்கு இணக்கமான ஒரு தலைவரை ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் அரசியல் பிரவேசத்தை ஒரு உதாரணமாக எடுத்து, அவரது முறைமைகளை ஆராய்ந்து வருகிறேன்.

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு புதிய விசாரணைப் பொறிமுறைகள் தேவையில்லை. தற்போதுள்ள நீதிப்பொறிமுறைகளே போதுமானது.

போரின் போது தனித்தனியான சில குற்றவியல் சம்பவங்கள் இடம்பெற்றன என்பதை நான் நிராகரிக்கவில்லை. ஆனால், முழு இராணுவத்தையும் குற்றம் சாட்டுவது நியாயமானதல்ல.

எனது கட்டுப்பாட்டில் இருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த குழுவொன்று ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்த குற்றச்சாட்டு தவறானது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு அவ்வாறு செயற்பட்டிருந்தால், அப்போதைய இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவே அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு தனது கட்டுப்பாட்டில் இருக்கவில்லை என்று அவரால் எப்படிக் கூற முடியும்? இது ஒரு நகைச்சுவை" என்றும் அவர் கூறியுள்ளார். (இ-7)

## விமலுக்காக தயாரித்த கடிதத்தில் முக்கிய தேரர் ஒப்பமிட மறுப்பு

(கொழும்பு)


தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவின் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு அவரை வலியுறுத்தும் வகையில், கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் ஒப்பம் இடுவதற்கு முக்கிய தேரர் ஒருவர் மறுப்புத் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுகேகொட விகாரையிலுள்ள விகாராதிபதியே இவ்வாறு புறக்கணித்துள்ளார்.

விமல் வீரவன்சவின் ஆதரவாளர்கள் சிலரே இந்த வேண்டுகோளை தேரரிடம் விடுத்துள்ளனர். இந்தக் கடிதத்துக்கு முக்கிய மகா நாயக்க தேரர்கள் கையொப்பம் இட்டால் மாத்திரமே, தான் கையொப்பம் இடுவது குறித்து யோசிக்க முடியும் எனவும் குறித்த தேரர் விமலின் ஆதரவாளர்களிடம் கூறியுள்ளார். (இ-7)

## முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக புதிய வழக்கு

### 142 மில்லியன் ரூபாயை செலுத்த தவறிவிட்டார்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக புதிய வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்து சபையிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பேருந்துகளுக்கு செலுத்த வேண்டிய 142 மில்லியன் ரூபா பணத்தினை செலுத்தாத காரணத்தினாலேயே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வாக்களிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த பேருந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குறித்த வழக்கு மே மாதம் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வரிக்குறைப்பின் பிரதிபலன் விரைவில் மக்களைச்சேரும்

### நிதியமைச்சர் ரவி வாக்குறுதி



"வெகுவிரைவில் வரிகளைக் குறைத்து அதன் பிரதிபலன்களை நாட்டு மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பேன்" என, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சிறந்த நிதியமைச்சராக விருது பெற்ற நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்காக, நிதியமைச்சில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வில் உரையாற்றும் போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் நாட்டை கையேற்கும் போது, எமது வருமானம் குறைவாகவே இருந்தது. அதனைக்கொண்டு கடன்களைச் செலுத்தினோம். ஆனால், நாம் மீண்டெழும் செலவுகளை விடவும் அதிக வருமானத்தை ஈட்டுகின்றோம். அதன் பயனாக கடனைச் செலுத்த கடன் பெற வேண்டிய தேவை இல்லை.


"இந்த குறுகிய காலம் அனுபவிக்கின்ற சிரமங்கள் நாளைய சிறந்த இலங்கைக்கான அர்ப்பணிப்பாகும். அதனால் வெகுவிரைவில் வரிகளைக் குறைத்து அதன் பிரதிபலன்களை நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கவுள்ளேன்.

"கடந்த இரு வருட காலப் பகுதியில் இந்நாட்டு பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சர்வதேச மட்டத்தில், இலங்கை தொடர்பில் சிறந்த நற்பெயரை உருவாகியுள்ளது. இலங்கையின் சில அடிப்படைவாத அரசியல்வாதிகள் இதனைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் சர்வதேச மட்டத்தில் இதற்குத் தற்போது அங்கீகாரம் கிடைத்துள்ளது.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமைத்துவம் இல்லாவிட்டால், இவ்வெற்றியை எம்மால் பெற்றிருக்க முடியாது.

"இந்நாட்டைச் சேர்ந்த சில குழுவினர் குரோத மனப்பான்மையுடன் நோக்குகினாலும் சர்வதேசம் எமது திறமைகளையும் எமது பயணத்தையும் பாராட்டியுள்ளமைக்கு இந்த விருது நல்ல உதாரணம். இப்படியான பாராட்டுக்களை, இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாம் பயன்படுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# காணாமல்போனோர் குறித்து தவிக்கின்ற உறவுகள் முதல்வருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடகிழக்கை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர் மற்றும் உறுப்பினர்களுக்குமிடையில் திடீர் சந்திப்பொன்று நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது. இந்த சந்திப்பின் முடிவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தகுந்த பதிலை வழங்குமாறும் நடவடிக்கை எடுக்குமாறும் முதலமைச்சரால் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 1 மணியிலிருந்து மூன்று மணிவரை நடைபெற்ற இந்த சந்திப்பில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்.மாவட்டம் மற்றும் திருகோணமலையை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது நிலைப்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி,


முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலையில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே நேற்றைய சந்திப்பு நடைபெற்றுள்ளது. குறித்த சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் சில வருடங்களின் பின்னர் சிலரால் கண்டதாக் கூறப்படும் நிலையில் அது தொடர்பான ஆவணங்களையும் முதலமைச்சரிடம் உறவுகள் கையளித்துள்ளனர்.

அந்த ஆவணங்களை பெற்றுக்கொண்ட முதலமைச்சர், அந்த ஆவணங்களில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளதாக கூறியுள்ளார். ஜனாதிபதியுடன் காணாமல் போன தனது பிள்ளை புகைப்படத்தில் நிற்பதாக கூறிய தாயொருவரும் நேற்றைய சந்திப்பில் முதலமைச்சரினை சந்தித்து போதிய ஆவணங்களை வழங்கியுள்ளார்.

நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அத்தனை தாய்மார்களும் தமது பிள்ளைகள், உறவினர்கள் தற்போதும் உயிருடன் உள்ளதாக நூறு வீத நம்பிக்கையுடன் கருத்து தெரிவித்திருந்தனர். யோசப் முகாம் போன்ற சித்திரவதை முகாம்களில் தற்போதும் தமது பிள்ளைகள் அடைக்கப்பட்டு இருக்கலாம் எனவும் தம்மிடம் சந்தேகம் தெரிவித்துள்ளதாக முதலமைச்சர் கூறினார்.

இந்த சந்திப்பில், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, உறுப்பினர்களான ரவிகரன், அனந்தி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதேவேளை இன்றைய தினம் கொழும்பு செல்லவுள்ள வடக்கு முதலமைச்சர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த விடயங்கள் தொடர்பில் பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (செ-4, 15)

# அம்புலன்ஸ் - ஹயஸ் விபத்து; ஹயஸ் சாரதி படுகாயம்



(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வாகனமும் அம்புலன்ஸ் வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதின் ஹயஸ் வாகன சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றத்தடியில் இடம்பெற்றது. விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஹயஸ் வாகனம் ஒன்று அருகாக நிறுத்தப்பட்டிருந்த ஹன்டர் வாகனத்தை விலத்திக் கொண்டு சென்றவேளை யாழ்ப்பாணத்திலிருந்து முழங்காவில் நோக்கி நோயாளர்களை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ்வண்டியுடன்மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

இவ் விபத்தில் ஹயஸ் வான் சாரதி படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மிருசுவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-3, 89, 23)


கண்ணீர் அஞ்சலி



சின்னப்பு நவரத்தினம்

எமது சங்க உறுப்பினராகிய
வைத்தியர் K. அன்பரசியின்
பாசமிகு தந்தையும்
வைத்தியர் கேதீஸ்வரனின்
மாமனாரும் ஆகிய
சின்னப்பு நவரத்தினம்
அவர்களின் மரணச் செய்தி
கேட்டு துயருறும் நாம்,
அன்னாரின் ஆத்ம
சாந்திக்காய் பிரார்த்தித்துக்
கொண்டு எம் இறுதி அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம்

அரச சித்த வைத்திய அதிகாரிகள் சங்கம்
கைதடி

(8636)


## கொலைச் சந்தேக ...

கள் 3 பேரை கொலை செய்ததுடன் மனைவி மற்றும் அவரது மைத்துனனை கொலைசெய்ய எத்தனித்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த வழக்கின் தொடர் விசாரணைகள் யாழ் மேல் நீதிமன்றில் கடந்த 27 ஆம் திகதியில் இருந்து நடைபெற்று வருகிறது.

வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந்த் ஆஜராகியிருந்ததுடன் எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் திருக்குமரன் மற்றும் கே.ரஞ்ஜித்குமார் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். சாட்சிகளின் நலன் சார்பில் சட்டத்தரணிகளான என்.பார்த்தீபன், வி.கௌதமன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

மேற்குறித்த வழக்கில் சிவில் சாட்சியங்களின் விசாரணைகள் நேற்று முன்தினம் முடிவுற்ற நிலையில் நேற்றைய தினம் 8 ஆம், 9 ஆம் சாட்சியங்களின் விசாரணை இடம்பெற்றது.

அதில் 8 ஆம் சாட்சியான பொலிஸ் உப பரிசோதகர் ஜெயவம்ச சாட்சியமளிக்கையில்,

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள சோக்கோ பிரிவுக்கு கடந்த 2015.05.24 ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் இருந்து அறிவித்தல் வழங்கப்பட்டது. அச்சுவேலி கதிரிப்பாய் எனும் இடத்தில் இடம்பெற்ற குற்றச்செயல் தொடர்பில் அந்த பகுதியில் பரிசோதனை மேற்கொண்டு சான்றுப்பொருட்களை பெற்று அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்புவதற்கு அன்றைய தினம் அதிகாலை சென்றேன்.

அந்த இடம் சன நடமாட்டம் உள்ள இடமாக இருந்தது. குற்றச்செயல் இடம்பெற்ற இடத்தில் காயப்பட்டவர்கள் எவரும் இல்லை. வீட்டைச் சூழவுள்ள பகுதிகளில் இரத்தம் வழிந்தோடிய இரத்த கறைகள் காணப்பட்டன. தலை முடியின் ஒரு பாகம் இருந்தது. வீட்டினுள் பொருட்கள் பானைகள் வீசப்பட்டிருந்தது. எதிரியால் விட்டுச்செல்லப்பட்டதாக கருதும் நயிலோன் கயிறும் இருந்தது. அந்த சான்றுப்பொருட்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டோம்.

அத்துடன் சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கத்தியில் இருந்த இரத்த மாதிரியும் பெற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் 3 பகுதியாக பாரப்படுத்தியிருந்தேன் என சாட்சியமளித்தார்.

9 ஆம் சாட்சியான பொலிஸ் சார்ஜன்ட் செனவிரட்ண ராஜபக்ஷ சாட்சியமளிக்கையில்,

அச்சுவேலி கதிரிப்பாய் முக்கொலை வழக்கு தொடர்பாக 2014.05.05 ஆம் திகதி குறித்த குற்றச்செயலுடன் தொடர்புடைய முச்சக்கரவண்டியை பரிசோதித்தேன். அது அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கராஜ் இல் நிறுத்தி வைக்கப்படடிருந்தது. வெள்ளை நிற முச்சக்கரவண்டி அதனுள் நான் பார்த்த போது ஆசனத்தில் சில பகுதிகளில் சிவப்பு நிற இரத்த கறை காணப்பட்டது. அந்த இரத்த மாதிரிகளை கைப்பற்றி 1, 2 என இலக்கமிட்டு நீதிமன்றில் பாரப்படுத்திய பின்னர் பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது என சாட்சியமளித்தார்.

குறித்த குற்றச்செயலுடன் தொடர்புடைய முச்சக்கர வண்டியை வழக்கின் சான்றாக எக்ஸ் என அடையாளமிட அரச சட்டத்தரணி மன்றில் கோரியிருந்தார். அதற்கு மன்று அனுமதி வழங்கியிருந்தது.

மேலும் அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் இருந்த எடுத்து வரப்பட்ட குறித்த வழக்கின் சான்றுப்பொருளை இன்றைய தினம் அடையாளம் காட்டுவதற்காக வழக்கின் 4 ஆம் 5 ஆம் சாட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அத்துடன் எதிரி தனது பிரதான கோரிக்கையாக தனது மகனை காட்டுமாறு கோரியிருந்தார். அதற்கமைய மனிதாபிமான அடிப்படையில் அவருடைய மகனை அவர் கண் முன் சிறிது நேரம் காண்பிக்குமாறு எதிரியின் மனைவிக்கு அறிவித்ததுடன் எதிரியை இன்றைய தினம் வரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இன்றைய தினம் குறித்த வழக்கின் அரச தரப்பு சாட்சிகளான பொலிஸ் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ளதுடன் எதிரியின் சாட்சியமும் இடம்பெறவுள்ளது. (செ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





செல்வன்
தர்மராசா ஸ்ரீசாந்தன்
(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)
சாதாரண தரப் பரீட்சையில் 7ACS
பெறுபேறுகள் எடுத்த எங்கள்
பெறாமகன்
தர்மராசா ஸ்ரீசாந்தன்
சாதாரண தரப் பரீட்சையில்
சித்தியடைந்தாய்,
உயர்தர பரீட்சையில்
உயர்வடைவாய்,
பல்கலைக்கழகம் செல்வாய்,
பட்டம் பெறுவாய்,
பட்டம் பெற்று வந்து
கற்ற கல்வியால்
கல்விச் சேவை
மக்களுக்கு செய்வாய்.
கல்வியே உன் சுவாசம் - அதை
கற்று வென்றுவா உலகம்
உன்புகழ் பேசும்.

வாழ்த்துவோர் :
து.யோகராசா (பெரியப்பா),
யோ.சூரியகலா (பெரியம்மா)
பானு அக்கா, சலு அக்கா,
சஜீப் அண்ணா

(8434)

# கபில ஹெந்தவிதாரணவிடம் புலனாய்வுப் பிரிவு விசாரணை



(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி கபில ஹெந்த விதாரணவிடம் புலனாய்வுப் பிரிவி னர் நேற்று முன்தினம் விசாரணை நடத்தி யுள்ளனர்.

ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அண்மையில் அமைச் சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா முக்கிய விடயங்களை புலனாய்வுப் பிரிவிற்கு தெரி வித்திருந்தார். இந்த கடத்தல் சம்பவம் மட்டுமன்றி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், தாக்குதல்கள், கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் கபில ஹெந்தவிதாரண தலைமையிலான ஓர் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது என சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தும் நோக்கில் ஹெந்த விதாரண புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் காலை 9.30 மணி முதல் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் நாட்களில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் படையதிகாரிகளிடமும் கடந்த கால குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது. (இ-7)


## வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் நயினாதீவில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய வீட்டுப் பணியாளர் (ஆண்/பெண்) தேவை. வயதெல்லை 55 தொடக்கம் 70. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு :
077 169 7816

(8402)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற இலிகிதர்– CTB)



மாவிட்டபுரம் மதவடியைப் பிறப்பிடமாகவும் வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை), சிவரூபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கௌரி (ஆசிரியை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), பாலரூபன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இரத்தினம் (லண்டன்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சாவித்திரி மற்றும் ராணி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் சிவலிங்கம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், தினேஷ் (கள உத்தியோகத்தர், SOND நிறுவனம்), அனுசா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), செந்தூரன் (மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தன்யஸ்ரீ, துளசிகன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.03.2017) இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

தகவல் :- குடும்பத்தினர் (021 205 9850)

(8425)

## லயக்குடியிருப்பில் திடீர் தீ விபத்து மூன்று வீடுகள் சேதம்

திம்புள்ள - பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சென். கிளயார் தோட்ட டெவோன் பிரிவு தோட்ட குடியிருப்பில் நேற்று அதிகாலை 5 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 18 வீடுகள் கொண்ட தொடர் லயக்குடியிருப்பில் மூன்று வீட்டிற்குள் ஏற்பட்ட தீயினால் ஒரு வீடு முற்றாகவும், ஏனைய இரண்டு வீடுகள் பகுதியளவிலும் எரிந்துள்ளது.

இந்த வீடுகளில் குடியிருந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் தற்காலிகமாக அயலவர்களின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முற்றாக எரிந்த வீட்டில் பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடைகள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன. (இ-7)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(8168)


## நாற்பதாவது அகவை நினைவேந்தல்

அமரர் இரகுபதி திருமால்



மண்ணில் :- 29.03.1977 விண்ணில் :- 31.12.2008


இன்று நாற்பது அகவை ஆகுதையா
உந்தனுக்கு ஈழ மண்மீட்க
இன்னுயிரை ஈய்ந்தவரே என்றும்
உன் நினைவில் வாழ்கின்றோம்
விழிநீர் சொரிந்து உனது அன்பிற்கு
ஏங்குகின்றோம்.

தகவல் :
சிவநகர் அ.இரகுபதி (குடும்பத்தினர்)

(C-7934)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

திருமதி தாமோதரம்பிள்ளை அகிலாண்டேஸ்வரி



கிளி., திருநகர், இணுவில் கிழக்கு ஆகிய இடங்களை வதிவிடமாகக் கொண்ட தாமோதரம்பிள்ளை (ஆயுர்வேத வைத்தியர்) அவர்களின் அன்புத் துணைவி தா.அகிலாண்டேஸ்வரி இறைவனடி சேர்ந்த முதலாம் ஆண்டு நினைவுநாள் இன்று 29.03.2017 புதன்கிழமை இணுவில் கிழக்கு இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல் : அ.தாமோதரம்பிள்ளை (குடும்பத்தினர்)

(C-7935)

## இராசி பலன்

29.03.2017
(பங்குனி 16, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
பிரதமை காலை 7.17 மணிவரை
துதியை பின்னிரவு 5.16 மணிவரை
ரேவதி பிற்பகல் 1.14 மணிவரை
சுபநேரம் 4.43-6.13 மணிவரை
இராகுகாலம் 12.13-1.43 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி,புத சந்,சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| | உத்தரம், அத்தம் பகல் 12.56 மணிக்கு மேடம்,சந் | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கொஞ்சம் குறையலாம், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** தொழிலில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** மனதில் எதிர்பாராத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், தடைப்பட்ட காரியங்கள் மாலைநேரம் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி:** நடைபெறவிருந்த காரியமொன்று மாலைநேரம் தாமதமாகலாம், கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், எடுத்த கருமங்களில் முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** பொருளாதார நிலை உயர்வதற்கான வழியைக்கண்டு கொள்வீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**தனுசு:** பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்:** போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கும்பம்:** வாய்ப்புக்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள், சுதந்திரமாகச் செயற்படும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணவரவுகள் திருப்தி தரும்.

**மீனம்:** எந்தவொரு காரியத்திலும் முழுமையாக ஈடுபட முடியாமல் மனம் அலைபாயும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பலாலி புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கழமை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. குறித்த பகுதிக்குள் மாதத்தில் ஒரு தடவை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற திருப்பலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா,சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# பாலர் ஆக்கத்திறன் கண்காட்சி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் பாலர் ஆக்கத்திறன் கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாலர் பகல் விடுதி பிரதான மண்டபத்தில் இடம்பெறும். த.மனோகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் கலந்து கொள்வார். இந்நிகழ் வில் பெற்றோர்,நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுமாறு முன்பள்ளிச் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (இ-3,136)

# ஹெரோயினுடன் கைதானவர் 14 நாட்கள் விளக்கமறியலில்

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார். நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை வல்வெட்டித்துறை பகுதியில் வைத்து ஒன்றரை கிலோ கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட அதே பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபரினை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் அன்றைய தினம் இரவு நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது அவரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-60)

# முதியோர் பேரவையின் ஆளுநர் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முதியோர் பேரவையின் ஆளுநர் சபைக் கூட்டம் நாளை மறுதினம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊரெழு மனித உரிமை இல்லத்தில் பேரவையின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெறும்.

இக் கூட்டத்தில் சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வே.கனகசேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3,134)

# பொலிஸாரின் கடமைக்கு இடையூறு 62 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றியதுடன் அதை தடுக்க சென்ற பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த நபருக்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் நேற்றையதினம் 62 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

அரியாலைப் பகுதியில் மேற்படி நபர் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்ந்து கொண்டிருந்த போது குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார் அதனை தடுத்துள்ளனர். அப்போது குறித்த நபர் பொலிஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு பொலி ஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

குறித்த நபரை கைது செய்த பொலிஸார் நேற்றை தினம் யாழ். நீதிமன்றில் முற்படுத்திய போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து 62 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

இதேவேளை அரியாலைப்பகுதியில் உழ்வியந்திரம் ஒன்றில் மணல் ஏற்றி சென்ற நபர் ஒருவரை கைது செய்து நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது அவரும் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து அவருக்கெதிராக 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டப்பட்டது. (இ-9).

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

தவத்திரு தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 102 ஆவது குருபூசை நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள நினைவாலயத்தில் இடம்பெறும். காலை 6 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று நற்சிந்தனை, பஜனைகள் இடம்பெறவுள்ளதுடன் முற்பகல் 11.30 மணிக்கு தேரடியில் விசேட பூசை இடம்பெறும். பிற்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம் பெறும்.(இ-3)




# கணவன்-மனைவி கொலை; எதிரியின் பிணை இரத்து

## தொடர் விசாரணைக்கு நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் கணவன்-மனைவியை கொலை செய்த வழக்கில் எதிரியின் பிணை இரத்து செய்யப்பட்டு வழக்கின் தொடர் விசாரணையை மே மாதம் ஆரம்பிக்க யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலை சேர்ந்த நபர் கடந்த 2009 ஜூலை மாதம் 29 ஆம் திகதி கோண்டாவில் பகுதியில் வசித்து வந்த கணவன் மனைவியான வீரசிங்கம் சுரேஸ்குமார், சுரேஸ்குமார் சுகதீபா ஆகியோரை கொலை செய்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதன் அடிப்படையில் 2 கொலைகள், மேற்கொண்டதாக இவர் மேல் குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டத்தரணி நிஷாந் நாகரட்ணம் ஆஜராகியிருந்தார்.

நேற்றைய தினம் மன்றில் குற்றப் பகிர்வுப் பத்திரம் எதிரிக்கு வாசித்துக்காட்டப்பட்ட போது 2 குற்றச்சாட்டுக்களுக்கும் எதிரி தான் சுற்றவாளி என மன்றுரை செய்து யூரல் சபை இல்லாத விசாரணையை தெரிவு செய்வதாக தெரிவித்தார்.

அந்த வகையில் குறித்த வழக்கை எதிர்வரும் மே மாதம் 2,3,4 ஆகிய நாட்களில் தொடர் விசாரணை நடத்த நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

மேற்குறித்த வழக்கில் உள்ள 10 சாட்சிகளில் தேவையான சாட்சிகளை ஆஜராகுமாறும் அழைப்பாணை விடுத்திருந்தார்.

எதிரியின் பிணை இரத்து செய்யப்பட்டு மே மாதம் 2 ஆம் திகதி வரை எதிரியை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தர விட்டார். (இ-9)

# ஊறணியில் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் வரும்

## வடக்கு கிராமிய அமைச்சர் நடவடிக்கை

வலி.வடக்கு ஊறணி கிராமத்தில் அண்மையில் மீள் குடியேறிய மக்களுக்கு வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் ஊடாக பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அங்கு வாழ்ந்து வருகின்ற மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக கடந்த சனிக்கிழமை குறித்த கிராமத்திற்கு விஜயம் மேற்கொண்டு மக்களை சந்தித்தார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு ஊறணி கிராமமானது அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகும். இங்கு ஏறக்குறைய 193 குடும்பங்கள் மீள்குடியேறி பல்வேறு அசௌகரியங்களின் மத்தியிலும், நாளாந்த வருமானமின்றியும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலான குடும்பங்கள் தமது வாழ்வாதார தொழிலாக கடற்றொழிலையே மேற்கொண்டு வருகின்றனர். 27 வருடங்களின் பின்னர் மீள்குடியேறியுள்ள மக்கள் அடிப்படை கட்டுமான வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வாழ்ந்து வருகின்றதனை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக ஒரு கலந்துரையாடல் நடத்துவதற்குக்கூட பொதுநோக்கு மண்டபம் மற்றும் தளபாட வசதிகள் இன்றி சிரமப்படுவது வேதனையளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே எதிர்காலத்தில் தனது நிதியொதுக்கீட்டினூடாக செய்யக்கூடிய அபிவிருத்தித்திட்டங்களை அக்கிராமத்துக்கு கொண்டுவருவதாக வாக்குறுதியளித்து இவ்வருடம் மாவீரர், புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கான வேலைத்திட்டத்தில் நலிவுற்ற குடும்பங்களை உள்வாங்கத் திட்டமிட்டுள்ளேன் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# போராட்டம் தொடர்கிறது



காணாமல் போனோரின் உறவினர்களினால் வடமராட்சிக்கிழக்கு மருதங்கேணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு பெருமளவானோர் ஆதரவளித்து வருகின்றனர். மருதங்கேணிப் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் காணாமல் போனோரின் உறவினர்களால் தொடர் போராட்டம் நடத்தப்பட்டு வரும் நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை பதின் நான்காவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தினை நடத்தினர். இக்கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், கடற்றொழில் சங்கத்தினர், மதகுருமார்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் உ.நிதர்சன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக்கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர். (இ-60)

13

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

ஆசிரியர் குறிப்பு

தமிழர் தலைவிதி எப்படியாகும் என்ற இத்தொடர் யாருக்கும் எதிரானதோ அன்றி யாரையும் வஞ்சிப்பதற்கானதோ அல்ல. தமிழ் மக்களின் இன்றைய சூழ் நிலையில் உண்மைகள் வெளிப்படுத்தப்படவேண்டும் என்ற ஒரே நோக்கிலேயே இத்தொடர் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

இருளைக் குறை கூறாதீர்கள் ஒளியை ஏற்றுங்கள் என்பதற்கு அமைவாக தொடர்ந்தும் குறை சொல்வதைத் தவிர்த்து உண்மையை வெளிப்படுத்துவதும் மக்கள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருவதும் இன்றைய உடனடித் தேவையாகும்.


கண்முன்னே அநியாயம் நடந்து கொண்டிருக்கும் போது அதனைப் பார்த்திருப்பதும் பாவம் என்பது தான் நம் நிலைப்பாடு.

அதேவேளை இத்தொடரில் வருகின்ற தகவல்கள், சம்பவங்கள் தொடர்பில் யாருக்கேனும் அதிருப்தி இருக்குமாயின் அவர்கள் தங்களின் கருத்துக்களை இவ்விடத்தில் பதிவு செய்வதற்குச் சம சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரி நாளிதழ் நடுவுநிலையைப் பேணுவதைத் தன் குறிக்கோளாகக் கொண்டது. எனவே சகலருக்கும் சம வாய்ப்பு வழங்குவதென்பது நடுவுநிலைக்கு அடிப்படையானது என்ற வகையில் இத்தொடர் குறித்த கருத்துக்கள், பதிலுரைப்புக்கள் அனுப்பி வைக்கப்படின் அவை இங்கு பிரசுரிக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

-ஆசிரியர்-





வடக்கு மாகாண சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் களமிறங்கினார். சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் இருந்திருந்தால் மாவை. சேனாதிராஜாவையே அந்த இடத்திற்கு நிறுத்துவர் என்றொரு எதிர்பார்ப்பு இருந்தது. மாவை. சேனாதிராஜா அவர்கள் தேர்தலில் இறங்கினால் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகள் இருந்ததான தகவல்களும் உண்டு.

நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுவதன் காரணமாக முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதை டக்ளஸ் தேவானந்தா தவிர்த்துக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

அதாவது விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றி அவருக்கு நிச்சயமானது என்ற அடிப்படையிலேயே டக்ளஸ் தேவானந்தா போட்டியிடுவதைத் தவிர்த்தார் என்று கூறுவோரும் உளர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் அவர்கள் போட்டியிடுவது கூட்டமைப்பிற்குள் இருக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு உடன்பாடில்லை என்பது உண்மை. அதனால் அவர்கள் விக்னேஸ்வரனுக்கு எதிராகச் செயற்பட்டனர்.

தங்கள் கட்சியில் போட்டியிடுகிறார் என்று தெரிந்தும் அவரை எதிர்க்கவேணும் என்ற ஒரே குறிக்கோளில் செயற்பட்டவர்கள் விக்னேஸ்வரனின் இரண்டு மகன்களும் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்தவர்கள் என்று கூடப் பிரசாரம் செய்தனர். ஆனால் அவை எதுவும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

விடுதலைப்புலிகளின் தலைமைக்குப் பின்னர் தமக்கொரு மீட்பர் தேவை என்றிருந்த தமிழ்மக்கள் அந்த மீட்பர் விக்னேஸ்வரன் என்று அடையாளப்படுத்தினர். அதற்கேற்றாற்போல் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களும் நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானமும் கொண்டவராக இருந்தார். தீரத்துடன் தன் உரைகளை ஆற்றினார். அவரின் உரைகள் தமிழ் மக்களை கவர்ந்தன. அதில் நிறைந்த நியாயம் இருப் பதை உணர்த்தின. ஒரு இலட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகள் என்ற சாதனையோடு அவர் வடக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் ஆனார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. வீட்டுச் சின்னத்தில் யாரெல்லாம் வேட்பாளர்களாக நின்றனரோ அவர்களுக்கெல்லாம் வெற்றி என்பதாக நிலைமை இருந்தது. தமிழர் அரசு மலர்ந்தது என்று மக்கள் மனம் மகிழ்ந்தனர். கூடவே வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது வரலாற்றில் முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் மக்கள் மனவிருப்போடு வாக்களித்ததைக் காண முடிந்தது.

யுத்தத்தில் காலை இழந்தவர்கள், கையிழந்தவர்கள் இருந்தும் நடந்தும் தவழ்ந்தும் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வீட்டுச் சின்னத்திற்கும் 10 ஆம் இலக் கத்திற்கும் புள்ளடியிட்டனர். முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரனின் விருப்பு இலக்கம் 10 என்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

வடக்கு மாகாண அரசிடம் தமிழ் மக்கள் நிறைய எதிர் பார்த்தனர். ஆனால் வடக்கின் முதலமைச்சராக இருக்கும் விக்னேஸ்வரனுக்கு எதிரான வர்கள் கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு சதித்திட் டம் தீட்டினர்.

கூட்டமைப்புக்கு எதிராக முதலமைச்சர் செயற்படுகின் றார் என இரா. சம்பந்தனின் காதில் போட்டு வைத்தனர். அரசியலின் சூத்துமாத்து தனங்களை அறியாத முதல மைச்சர் விக்னேஸ்வரன் ஒரு நீதியரசர் போலவே நடந்து கொண்டார்.

இராமபிரானுக்கு முடிசூட்டாத வரைக்கும் தசரதன் மாளிகையில் எந்தச் சிக்கலும் ஏற்பட்டிருக்கவில்லை. இராமருக்கு முடிசூடுவதென தசரதன் தீர்மானித்தாரோ அன்று தான் கைகேயி பகையானாள். பட்டாபிஷேகத்தைத் தடுப்பதென மந்தரை சண்டமாருதமென எழுந்தாள். தசரதன் மாண்டான். இராமன் காடேகினான். அயோத்தி மாநகர் சோபையிழந்தது. தசரதன் ஆசனத்தில் பாதுகை ஏறிக் கொண்டது. பட்டாபிஷேகத்துடன்தான் பகை தெரியும் என்பது போல ஆன்மீகத்திலும் அறப்போதனைகளிலும் கொழும்புக் கம்பன்கழகத்திலும் தன் சேவையை வழங்கிக் கொண்டிருந்த நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு முதலமைச்சருக்கான பட்டாபிஷேகம் நடந்த போதுதான் எதிரிகள் யார் என்பதை அறிய முடிந்தது.

முன்பின் அரசியல் தெரியாததால் தனக்கு எதிராகச் செயற்படுபவர்களைக்கூட அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. சிலர் முதலமைச்சரை அணுகி உதவி செய்ய முற்பட்டனராயினும் அவர்களுக்கும் அவர் இடம் கொடுக்கவில்லை.

ஆக, நீதியரசராக இருக்கின்ற ஒருவர் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டுமோ அதை அவர் முதலமைச்சர் பதவியிலும் கடைப்பிடித்தார்.

அதேவேளை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னை ஒரு அரசியல்வாதியாகவோ அல்லது ஒரு அரசியல் கட்சி சார்புடையவராகவோ இம்மியும் நினைத்தாரில்லை.

தமிழ்மக்களுக்காகவே தன் பதவி என்பதை அவர் ஆழமாகப் புரிந்து கொண்டார். அதே நேரம் ஒரு நல்ல ஆரம்பம் அரைப்பங்கு வெற்றி என்பது போல முதலமைச்சர் பதவியைப் பொறுப்பேற்கும் போது வழமையான நடைமுறைக்கு அமைவாக, அப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு முன்பாகவே பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இஃது ஒரு நேசக்கரம் நீட்டும் செயலாக இருந்தது.

அதேசமயம் மகிந்த ராஜபக்ஷவும் தன்னை மறந்து தன்னிடம் இருந்த ஒரு பிள்ளையார் சிலையை முதல்வர் விக்னேஸ்வரனிடம் நினைவுப் பரிசாகக் கொடுத்தார். விக்னேஸ்வரனுக்கு விக்னேஸ்வரனைக் கொடுப்பதே பொருத்தம் என்றெல்லாம் சிந்தித்து நடந்த சம்பவம் அல்ல அது. ஆனாலும் இயற்கையாக அது ஒரு தத்துவத்தை எடுத்துக்கூறுவது போல அமைந்துவிட்டது.

(வளரும்)

-புருசோத்தமன்-


# காணி அனுமதிப்பத்திரமின்றி 27 வருடங்கள் வாழ்ந்து வருகின்றோம்

## பன்னங்கண்டியில் 7 ஆவது நாளாகவும் போராட்டம்

(மல்லாவி)

கிளிநொச்சி பன்னங் கண்டி மக்களின் போராட்டம் நேற்று 7வது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

27 வருடங்களிற்கு மேலாக வாழ்ந்து வரும் தமக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கக் கோரியும், வீட்டுத் திட்டம் உள் ளிட்ட அடிப் படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி யும் குறித்த போராட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.



7வது நாளாக தொடரும் குறித்த போராட்டத்தில் பன்னங்கண்டியிலுள்ள சரஸ்வதி கமம், ஜொனி குடியிருப்பு மக்கள் ஈடுபட்டு வருகின்ற னர்.

(2-5-15-312)




# வீரபுரம் மக்களின் காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உறுதி



வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெரிய புளியாலங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீர புரம் கிராம மக்களின் காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வீரபுரம் கிராமமானது குடியேற்றக்கிராமமாகும். இங்கு 1996 களில் 400 குடும்பங்கள் குடியேற்றப் பட்டன. இவர்களுக்கு வீட மைப்பு அதிகார சபையினூ டாக வீட்டுத்திட்டமும், தலா 6 பரப்பு காணி குடியிருப்பதற் கும், வாழ்வாதார நடவடிக்கை களை மேற்கொள்ள ஒவ் வொரு குடும்பத்திற்கும் ஒரு ஏக்கர் வீதம் மேட்டுக்காணி களும் வழங்கப்பட்டிருந்தன. இவற்றிற்கான காணி அனு மதிப்பத்திரங்களும் பிரதேச செயலகத்தினால் வழங்கப் பட்டிருந்தன.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையினால் அங்கிருந்த மக்கள் இந்தியாவுக்கும், வேறு பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்த நிலையில் தற்போது மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

அதேவேளை இவர்க ளுக்கு வழங்கப்பட்ட மேட் டுக்காணிகளை அயலிலுள்ள கிராமங்களை சேர்ந்த பெரும் பான்மையினத்தை சேர்ந்த சிலரும் ஊர்காவல் படையி னரும் தமது தேவைகளுக் காக காடுகளை துப்புரவு செய்வதாக பொதுமக்களால் கடந்தவாரம் சுகாதார அமைச்ச ரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து அமைச் சரின் தலையீட்டினால் அத்து மீறிய காணி சுவீகரிப்பு முயற்சி அரசாங்க அதிபரூ டாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து அமைச்சரின் வேண்டுகோளுக் கமைய மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகு மார தலைமையில் விசேட கூட்டமொன்று அண்மை யில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச செயலா ளர், வெங்கலச்செட்டிகுளம் உதவி பிரதேச செயலாளர், பிரதேச செயலகங்களின் காணிக்கிளைகளின் காணி உத்தியோகத்தர்கள் ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச செய லக எல்லை நிர்ணயம் மற் றும் காணிக்கான ஆவணங் கள் வைத்திருப்பவர்களுக்கு காணியை வழங்குதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப் பட்டு முடிவெட்டப்பட்டன.

இதன்போது கருத்து தெரி வித்த சுகாதார அமைச்சர் இரண்டு இனங்களுக்கிடை யிலான முரண்பாடுகள் தோற்று விக்கப்படாத வகையில் இந் தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென அரசாங்க அதிபரை கேட்டுக் கொண்டார். (2-5)

## 6 ஆவது நாளாகவும்

# முள்ளிக்குளம் கிராம மக்களின் நிலமீட்பு போராட்டம் தொடர்கிறது



மன்னார் மாவட்டத்திற் குட்பட்ட முசலி பிரதேசச் செயலக பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக் கள் நேற்று செவ்வாய்க் கிழமை 6 ஆவது நாளாக வும் தமது கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத் துள்ளனர்.

கடற்படையினரால் கைய கப்படுத்தப்பட்டுள்ள தமது கிராமத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தொடக்கம் கவன யீர்ப்புப் போராட்டத்தை மக் கள் முள்ளிக்குளம் கிராம நுழைவாயிலின் வீதி ஓரத் தில் உள்ள மரநிழலில் ஆரம்பித்துள்ளனர்.

முள்ளிக்குளம் மக்களின் கவனயீர்ப்புப் போராட்டத் திற்கு வலுச்சேர்க்கும் வகை யில் அருட்தந்தையர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங் கத்தினர் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபையின் உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதி கள், இன, மத, மொழி வேறு பாடுகள் இன்றி முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் எனப் பலரும் இணைந்து கொண்டு ஆதரவு வழங்கி யுள்ளார்கள்.

இதேவேளை நேற்றைய கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வருகை தந்த ஈ.பி.ஆர். எல்.எப். தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் வருகை தந்து ஆதரவு வழங்கியி ருந்தார். (2-5)

# கள்ளிக்குளத்தில் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டார் சுகாதார அமைச்சர்



(வவுனியா )

வவுனியா கள்ளிக் குளம் கிராமத்தில் காட்டு யானைகள் தாக்கி சேதமடைந்த வீடுகளை வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்று நேரில் சென்று பார்வை யிட்டுள்ளதுடன் பாதிக்கப் பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அதி காலை கள்ளிக்குளம் கிரா மத்திற்குள் நுழைந்த காட்டு யானைகள் அங்கு மீள்குடியேறியுள்ள மக்க ளின் வீடுகளை தாக்கி சேதப்படுத்தியதுடன் வீட்டி லிருந்த பயிர்களையும் சேதமாக்கியுள்ளது.

இதனால் மீள்குடியேறி மக்கள் வசித்து வந்த ஆறு வீடுகள் கடுமையாக சேதம டைந்துள்ளதுடன் தெய்வா தீனமாக யாருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

இந்த நிலையில் நேரடி யாக களத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் அங் குள்ள மக்களை சந்தித்து உரையாடியதுடன் வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் அனர்த்த முகா மைத்தவ திணைக்களங் களுடன் தொடர்புகொண்டு மக்களுக்கு ஏற்பட்ட சேத விபரங்களை தெரிவித்த துடன் அவர்களுக்கான நிவார ணங்களை வழங்குமா றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பல இடம் பெயர்வுகளைச் சந்தித்த மக் கள் தற்காலிக வீடுகள் அமைத்து மீள்குடியேறி வரும் நிலையில் இவ்வா றான அனர்த்தங்கள் மக் களை மேலும் நெருக்கடிக் குள் தள்ளியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# க.பொ.த.(சா/த)பரீட்சை - 2016 பெறுபேறுகள்

2016 ஆம் ஆண்டு டிசெம் பர் மாதம் நடைபெற்று முடிந்த க.பொ.த. (சா/த) பரீட்சைப் பெறு பேறுகள் நேற்றைய தினம் வெளியாகின. இந்நிலையில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் அந்தந்தப் பாடசாலை அதிபர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சிற ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விப ரம் வருமாறு,

கிளி/கிளிநொச்சி மத் திய மகா வித்தியாலயம்

ஸ்ரீ.ஜெனுசன்-9ஏ, க.பிர வீன்-9ஏ, ச.ரிக்ஷன்- 8ஏபி, சி.ரேணுஜன்- 8ஏபி,ச.துவஸ்டா- 8ஏபி,ஜெ.கீர்த் தனன்- 8ஏசி, ச.சனுரிகா- 7ஏபிசி,கு.தர்சிகன்- 7ஏபிஎஸ்,ச.சதுர்சன்-6ஏ3பி, த.டிதுஷன்-சோ.திகிலினி-6ஏ 2பிசி, தி.நிரோஜா- 5ஏ2பி2சி.

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

தி.நிலா- 9ஏ, கு.தனுசிகா- 9ஏ, ச.இசைவாணி- 9ஏ, அ. தர்மிகா- 8ஏபி,ஸ்ரீ. கௌத மன்- 8ஏபி, வி.பரிக்ஷன்- 8ஏபி, ர.லெக்ஷனா- 8ஏபி, ர.கமீலா -8ஏபி, பி.பிரியந்தி- 8ஏபி, தி.கோபினுஜன் - 8ஏபி, சு.செந்தூரிகா - 8ஏசி, பா. கிருஷாலினி -8ஏசி, இ.கிஷா யினி- 7ஏ2பி, க.குகப்பிரி யன்- 7ஏ2பி, கு.தர்சிகன் - 7ஏ2பி, சி.சுலக்ஷிகா- 7ஏபிசி, யா.டிலக்ஷனா-6ஏ2பிசி, யோ. டிதுர்சன் -6ஏ2பிஎஸ், தி.சுகி ராஜ் -5ஏ3பிசி, ஸ்ரீ. பானுஜா- 5ஏ2பி2சி, லோ.யதுஷா- 5ஏ2பி2சி, ஸ்ரீ.கௌதமன்- 5ஏ2பி சிஎஸ், ர.திலக்ஷன் - 5ஏ2பி சிஎஸ்.

கிளி/ சென்.திரேஷா பெண்கள் கல்லூரி

ஸ்ரீ. தர்சிகா - 9ஏ, தி. டர் மிலா -9ஏ, அ.ஷாஜினி -8ஏபி, வி. மிதுர்ஷிகா -8ஏ பி, யோ. சதனிகா - 8ஏசி, சி. தர்சி - 7 ஏபிசி, வே. அபிராமி -6ஏ3பி, தி. அகல்யா -6ஏ3பி, ரா.ஜதுர் சிகா -5ஏ3பிசி, சி.தர்ஷா -5ஏ3 பிசி , பு. மகிழினி -5ஏ 3பி எஸ்,அ.மேரி அனிஸ்ரலா- 5ஏ2பிசிஎஸ்.

கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

க. நிலைக்சன்- 7ஏபி, ச. சுயரிதா-6ஏ2பிஎஸ், பா. பாலசுதன்- 6ஏ2பி, இ. மது சாளினி- 6ஏபிசிஎஸ், யோ. பிரசாந்தன்- 6ஏபிசி, சி. ஜீவனா- 5ஏ3பி, த. நிதர்சன் 4ஏ3பி எஸ்.(2-77)

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

நி.கோம்ஷா - 8ஏபி,யோ. டிலோஜிகா - 4ஏ4பிசி, ஜீ. ஜீவப்பிரிதா- 4ஏபி3சிஎஸ் , ஞா . சிந்துஜா - 4ஏ2பி3சி.

தமிழ்மொழிமுலம்

ம. அருணன் -7ஏபிசி

கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

ப.தஸ்மிகா -5ஏ3பிஎஸ், இ.சங்கவி- 5ஏபி2சிஎஸ், கு. திவாகர் -4ஏபி2சி2எஸ், கோ. பவானியா- 3ஏ3பி2சி எஸ்.

கிளி/ கண்டாவளை மகா வித்தியாலயம்

த.டிலக்சன் -4ஏ2பி2சிஎஸ்.

கிளி/ விவேகானந்த வித்தியாலயம்

சி.புவனேஸ்வரி- 6ஏ2சி எஸ், ப.ஜெபதீபா- 5ஏ3பி எஸ், மா.கதிர்முகிலன் - 5ஏ 3பிசி, இ.கிர்ஸ்மிதா - 4ஏபி 4சி, ப.டிக்சாளினி - 4ஏபி 3சி, ச.சிந்துஜன் -4ஏ2பி2எஸ், த.நிதர்சன்- 4ஏபி3சி.

கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்

பா.கிருபாளினி -8ஏசி, மோ.பிரதீப்- 7ஏபிசி, சு.லஜி பன் -7ஏபிசி, த.கம்சிகா - 5ஏ3பிசி.

கிளி/ புதுமுறிப்பு விக் னேஸ்வரா வித்தியாலயம்

எஸ்.நிரோஜா -7ஏபி, ரி.கபிலன்- 4ஏ4பி, வி.உசா தேவி- 3ஏ5பிஎஸ், வி.கயல் விழி- 3ஏ3பி2சி. (2-271)

வவு/ வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி

ஆங்கிலமொழி -9ஏ பெற்றவர்கள்

க.சஜனி, ச.சின்மயி, ஜெ. மதுசா, அ.லபிரா, பு.சங் கவி, அ.சரோனி இவன்சி லின், சி.அட்சயா,சூ.சரண்யா,கு.குசேதா.

தமிழ்மொழி மூலம் 9ஏ பெற்றோர்

பே.மயூரி, ச.கிசோபிதா, க.நிதிகா, ஜெ.சுஜித்திகா, கி.தர் சிகா, தி.கிருசிகா, த.சாம்பவி, கு.கோபிசாளினி, கி.லதுசிகா.

(2-5-250-271-277)

# உறவுகள், சொந்தக் காணியைப் பறிகொடுத்து யாருமற்ற நிலையில் நடுத்தெருவில் நிற்கின்றேன்

## முல்லையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினரொருவர் ஆதங்கம்




(பனிக்கன்குளம்)

உறவுகளை இழந்து சொந்தக்காணியை இராணுவத்திடம் பறிகொடுத்து நடுத்தெருவில் யாருமற்ற நிலையில் அநாதையாக்கப்பட்டுள்ளேன் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளில் ஒருவர் முல்லைத்தீவில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக 21 ஆவது நாளான நேற்றும் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளில் ஒருவரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும் இராணுவத்தால் விசாரணைகளுக்கு அழைத்துச் சென்றதன் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் யுத்தம் நிறைவடைந்து பிள்ளைகளை இராணுவத்திடம் கையளித்து சரணடைந்து பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது உறவுகளுக்கு நடந்தது என்ன என பதில் வழங்குமாறு கோரி அமைதி வழிப்போராட்டத்தில் வடக்கு மாகாணம் முழுவதும் ஈடுபட்டு வருகின்றனர்.


இவர்களில் முள்ளிவாய்க்காலில் வசிக்கும் நபரொருவர் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்திலே தனது தாய் தந்தை இருவரையும் இழந்து அதனைவிட கடந்த சுனாமியில் தனது அண்ணன் ஒருவரை இழந்து இறுதியாக இருந்த இரண்டு சகோதரிகளில் ஒருவரை இழந்து மற்றையவரை தேடி வீதியில் அநாதையாக நிற்பதாக கவலை வெளியிட்டுள்ளார்.

அதனை விட தன்னுடைய காணியை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும் தனக்கு இருக்க இடமின்றி தான் அநாதையாக்கப்பட்டுள்ளேன் என கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான எந்தவித பதிலும் கிடைக்காத நிலையில் தொடர்கிறது மக்களின் போராட்டம். (2-5-281)



# 59 மாணவர்களுக்கு பாதணிகள்



(மல்லாவி )

டேவிட் பீரிஸ் மோட்டோர்ஸ் கம்பனியின் ஏற்பாட்டில் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட வவு/கோவில் குஞ்சுக் குளம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவு/ கோவில்குஞ்சுக் குளம்அ.த.க. பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் சு.முகுந்தன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் சி.கதிரமலைநாதன் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகளை வழங்கி வைத்தார்.

இதன்போது முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 59 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதில் டேவிட் பீரிஸ் மோட்டோர்ஸ் கம்பனி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-5-15)

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று செவ்வாய்க்கிழமை 37 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஏ-9 வீதியில் உள்ள கிளிநொச்சி கந்த சுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டம் எவ்வித தீர்வுகளும் எட்டப்படாத நிலையில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதி நிதிகள் நேற்றைய தினம் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

(2-5-281-312-15)

# ஐ.தே.கட்சியின் மாவட்ட அலுவலகம் மன்னாரில் திறப்பு



(மன்னார்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான மாவட்ட அலுவலகம் மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது. குறித்த அலுவலகம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் 68 ஆவது பிறந்த தினமான கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஏ.சமீயூ முகம்மது பஸ்மி தலைமையில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் இணைப்புச் செயலாளர் பிறைம்லஸ் கொஸ்ரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு குறித்த மாவட்ட அலுவலகத்தை திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் ஐக்கிய தேசிய கட்சியின் மன்னார் தொகுதி அதிகார சபை நிர்வாகிகள், கட்சிக்கிளைகளின் தலைவர்கள், இளைஞர் அமைப்பு மற்றும் பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஐக்கிய தேசிய கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் பல பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் சுமார் 40 வருடங்களுக்கு பின்னர் நிகழ்ந்த குறித்த திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-5-4)




# மக்களின் தேவையை நிறைவேற்றுவதே எமது அரசியல் பயணத்தின் குறிக்கோள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதனையே தனது அரசியல் பயணமாக கொண்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அமைப்பின் செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமத்துவம் சமூக நீதிக்கான அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பிலான இன்றைய கலந்துரையாடலில் அதிகளவான பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. எமது மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள் என்ற செய்தி இதன் மூலம் வெளிப்பட்டு நிற்பதை நான் உணர்கிறேன்.

எங்களுடைய அமைப்பானது சமூக.சாதி. சமய வேறுபாடுகளைக் கடந்து செயற்பாடுகளை முன்னெடுக்கும். அது தான் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் நோக்கம். கடந்த காலத்திலும் கூட நாம் எங்கு மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்களோ. எங்கு பாரபட்சங்கள் நடந்துள்ளதோ அங்கேயே அதிகம் பணியாற்றியிருக்கின்றோம். ஆகவே எதிர் காலத்திலும் நாங்கள் அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறப் போவது கிடையாது.

நான் தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற நோக்கத்திற்காக எனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. அவ்வாறு ஒரு நோக்கம் இருக்குமாயின் என்னை நோக்கி வரும் அழைப்புக்களை ஏற்று அதன்படி சென்றிருப்பேன். ஆனால் அதனை நான் விரும்பவில்லை. மாறாக மக்களின் விருப்பத்தையே ஏற்றுக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் தோற்றாலும் எமது கொள்கைகளை விட்டுக் கொடுக்கப்போவதில்லை. நான் பதினேழு வயதிலேயே ஆயுதப்போராட்டத்தில் இணைந்துகொண்டவன். எனவே வென்றாலும் தோற்றாலும் மக்களின் பிரதிநிதியாகவே இருப்பேன். சொல்லைவிட செயல்தான் சிறந்தது என்ற அடிப்படையில் மக்களுக்கான பணியை தொடர்ந்தும் செய்வேன்.

தேசிய விடுதலை என்பது தனியே சிங்கள தரப்பினரிடம் இருந்து தமிழ் தரப்பு பெற்றுக்கொள்ளும் இன விடுதலை மட்டுமல்ல, இனத்திற்குள்ளும் இருக்கின்ற அனைத்து வகையான ஒடுக்கு முறைகளுக்குள் இருந்தும் அதாவது சமூக விடுதலையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும்தெரிவித்தார். (2-5-312)



முள்ளிவாய்க்கால் கிழக்கு சந்திரன் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக ஜே.ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் இணைப்பாளர் மற்றும் அருட்சகோதரி ஜேயுலின் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# பொலிஸ் இணையம் மீது சட்டவிரோத ஊடுருவல்

இலங்கைப் பொலிஸாரின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது, சட்டவிரோத ஊடுருவல் இடம்பெற்றுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இணையத்துக்குள் ஊடுருவியவர்கள், பொலிஸாரின் இணையப் பக்கத்திலிருந்த எந்தவொரு தகவலையோ, பதிவுகளையோ அல்லது தரவுகளையோ அழிக்கவில்லை என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த இணையத்தை ஊடுருவியவர்கள், இணையத்தின் முகப்பு பகுதியில் மாத்திரமே மாற்றத்தை செய்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## எரிகாயங்களுடன் பெண்ணின் சடலம்

கல்கிசை - கல்தமுல்ல பிரதேசத்தில் வீடொன்றின் குளியலறையில் இருந்து நேற்று முன்தினம் எரிகாயங்களுடன் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள சடலம் பதுளை - மடுல்சீமை பிரதேசத்தை சேர்ந்த 37 வயதான பெண்ணொருவர் எனவும் சடலத்திற்கு அருகில் இருந்து மண்ணெண்ணெய் போத்தல் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. மேலும், குறித்த பெண் அந்த வீட்டில் பணிப் பெண்ணாக வேலை செய்து வந்துள்ளவர் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-7)




# பிணைமுறி மோசடி குறித்த விசாரணைக்குழுவிற்கு பாதுகாப்பு வழங்கவில்லை

## நீதியரசர் சித்ரசிறி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குவின் தலைவர் நீதியரசர் கே.டி.சித்ரசிறி ஆணைக்குழுவின் விசாரணைகளின் இடைநடுவில் நேற்று முன்தினம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

குறைந்தபட்சம் விசாரணை நடத்தப்படும் தினங்களிலேனும் பொலிஸ் குழுவொன்றின் ஊடாக பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் விடுத்த கோரிக்கைக்கு இதுவரையில் எவ்வித பதிலும் அளிக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையானது மிகவும் ஆபத்தான ஓர் நிலைமை என அவர் தெரிவித்தார்.

விசாரணை நடத்தும் அதிகாரிகள் சாட்சியாளர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்க வேண்டியது ஆணைக்குழுவின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வழங்குவது குறித்து பொலிஸ்மா அதிபரின் நடவடிக்கை கேள்விகளை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்கள் நடமாட்டமற்ற ஓர் இடத்தில் விசாரணைகள் குழுவின் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சாட்சியளிக்க மற்றும் விசாரணைகளுக்காக வரும் போதும் அல்லது செல்லும் போது ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றால் அது பாரிய பிரச்சினைகளை உருவாக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிங்கள இனவாதிகளின் நோக்கத்தை தந்திரமாக நிறைவேற்றிய ஜனாதிபதி

பாதுகாக்கப்பட்ட வில்பத்து வன பிரகடனத்தில் முஸ்லிம் மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காது இனவாதிகளின் நோக்கத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றியுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கடுமையாக குற்றம் சுமத்தியுள்ளது.

மகிந்த அரசாங்கம் ஆரவாரமாகவும் வெளிப்படையாகவும் இனவாதிகளுக்கு சார்பாக செயற்பட்டு அவர்களின் நோக்கங்களை நிறைவேற்ற துணை போனது. ஆனால் இந்த அரசாங்கம் மிகவும் அமைதியாகவும் சூட்சுமமான முறையிலும் இனவாதிகளுக்கு உதவுகிறது.

ஜனாதிபதியின் இவ்வாறானதொரு பிரகடனத்திற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளும் துணை போயுள்ளமை கவலையளிப்பதாகவும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் ரஷ்யாவுக்கான விஜயத்தின் மத்தியில் வில்பத்து சரணாலயத்திற்கு வடக்கே அமைந்துள்ள நான்கு பிரதேசங்களை உள்ளடக்கி அவற்றை பாதுகாக்கப்பட்ட வனமாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானியில் கையொப்பமிட்டுள்ளார்.

வில்பத்து விவகாரத்தில் முஸ்லிம் தரப்பின் நியாயத்தையும் பிரச்சினைகளையும் காலம் தாழ்த்தாது ஒரு தலைப்பட்சமாக முடிவெடுத்திருக்கின்றமை தெளிவாகின்றது. அண்மையில் சைட்டம் விவகாரம்பூதாகரமாக வெடித்த போது அனைத்து தரப்புடனும் பேசிசமரசத்துக்குவரலாம் என குறிப்பிட்ட ஜனாதிபதி, ஏன் இவ்விடயத்தில் முஸ்லிம்களின் கருத்துக்களை ஆராயவில்லை எனக் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது.

மறிச்சுக்கட்டி உள்ளிட்ட பகுதிகள் முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகள் என அண்மையில் அங்கு சென்று கள ஆய்வை மேற்கொண்டு வந்த சூழலியலாளர்கள் குறிப்பிட்டும் ஜனாதிபதி இவ்வாறு வர்த்தமானி அறிவித்தலில் ஒப்பமிட்டிருப்பது முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர், பொறியியலாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலவச மின்சாரத்திற்காக மாலைதீவுடன் ஒப்பந்தம்



மட்டக்களப்பு மாவட்டத்தில், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்கு இலவசமாக மின்சாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கு மாலைதீவின் Renewable Energy Maldives நிறுவனத்துடன் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் நேற்று முன்தினம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா ஹிரா பௌண்டேஷன் தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் மாலைதீவின் Renewable Energy Maldives நிறுவனத்தின் தலைவர் இப்ராஹீம் நஸீட் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பிரதேசங்களை இனங்கண்டு அங்குள்ள வீடுகளுக்கு இலசவமாக சூரிய மின்கலங்களை (solar panels) இந்த நிறுவனம் வழங்கவுள்ளது.

அதில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி குறித்த வீட்டின் பயன்பாட்டுக்கும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், சூரிய மின்கலங்கள் பொருத்தப்படும் சிறிய வீடுகளுக்கு 1500 ரூபாவும் பெரிய வீடுகளுக்கு 3 ஆயிரம் ரூபாவும் மாதாந்த வாடகையும் மேலதிகமாக வழங்கப்படவுள்ளது.

அதுமாத்திரமல்லாது, ஐந்து வருடங்களின் பின்னர் மாத வாடகையாக 5 ஆயிரம் ரூபா வழங்கவும் குறித்த நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. (இ-7)

# 'நீரைப்பாதுகாப்போம்' அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் கொழும்பில் அங்குரார்ப்பணம்



(கொழும்பு)

நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்றத்திற்கான முதலீட்டுச் செயற்றிட்டத்தின் கீழ் கொழும்பு நீர்வளங்கள் திட்டத்தை முன்னேற்றுவது தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது "நீரைப்பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.savewater.lk) அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, மனோ கணேசன் பிரதி அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் நீர்வளங்கள் திட்ட வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# தேர்தலை பிற்போட நான் தயாரில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் முதலமைச்சர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் இதன் போதுநீண்டநேர கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

விரைவில் நடைபெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற வகையில் ஒருபோதும் தேர்தலை பிற்போடுவதற்கு தான் தயாரில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது கூறியுள்ளார். (இ-7)

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2016 பெறுபேறுகள்

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை - 2016 பெறுபேறுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியாகின. இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு.

**யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி**

தமிழ் மொழிமூலம்

பி.கேதாரணி-9ஏ, அ.தனஞ்சயன்-9ஏ, ஜெ.நிலாந்தி-9ஏ, ச.தர்சிகன்-8ஏபி, உ.உஷா யினி - 7ஏ2பி, நா.அனற் அஜித்ரா - 7ஏபிசி, கி.ஆதனா- 7ஏபிசி, சி.அபிநயா- 5ஏ4பி,நா. அஜிதன்- 5ஏ3பிசி, மோ.பவித்திரா- 5ஏ3பிஎஸ், வி.ரேகா- 5ஏ3பிஎஸ், சு.சங்கீர்த்தனன் -5ஏபி2சிஎஸ்.

ஆங்கில மொழிமூலம்

செ.சசீபன்-8ஏ, லி.சிவகாந்- 8ஏசி, செ.கஜந்திகா -7ஏ2சி, வ.தேனுகா- 6ஏ2பிசி, சி.அனிருத்தன்-6ஏ2பிசி, சு.தீவ்சிகா- 6ஏ2பிசி, ப.கிஷானி- 5ஏ3பிசி.

**யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

தமிழ் மொழிமூலம்

ர.ஆர்த்திகா-9ஏ, சி.ஜினுசியா- 9ஏ,யோ.நிருஷிகா-9ஏ, ஸ்ரீ.விதுர்ஷா- 9ஏ, உ.மிதுர்ஷா-9ஏ

ஆங்கில மொழிமூலம்

பி.தேனுஜா-7ஏபிசி, சி.தினோஜா -7ஏ2சி, க.துஷாரகா-6ஏபி2சி, கோ.அருட்செல்வி-6ஏபி2சி, பி.ஜனனி -6ஏ2பிஎஸ், அ.விதுர்ஷனா-6ஏ3பி, ஆ.தக்ஷாயினி- 5ஏ2பிசிஎஸ், ந.அகிதா-5ஏ3பிசி.

**யாழ்.அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

சு.சாரலன்-7ஏபிசி, நி.பிருந்திகா-7ஏபிசி, கி.பவாகரன்-7ஏபிஎஸ், லோ.அர்ச்சுதன்-7ஏபிஎஸ், ம.மேருஜன்-6ஏ3பி, சி.கிரிசாந்- 6ஏ2சி, சே.லெனின்ராஜ்-5ஏ4பி, மு.தேனுஜன்-5ஏ2பிசிஎஸ், செ.துஸ்யந்தன்-4ஏ4பிசி, ந.தேனுஜா- 4ஏ3பி2எஸ், அ.துஷ்யந்தன்- 4ஏ2பிசி, வி.நிருசன்-4ஏ3பிசி.

**யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்

த.றேனுஜன்-9ஏ, தி.மணிமோகன்-9ஏ, ம.துஷாரா-9ஏ

தமிழ் மொழி மூலம்

சர்மிலன்-9ஏ, ஜெ.சாகித்யன்- 8ஏபி,க.நிசாந்தினி-8ஏபி, சி. கிருத்திகன்-8ஏசி, க.சயித்-8ஏசி, பா.ஷாணு-8ஏசி, தே.கர்ஷிகா-8ஏசி, ஜெ.றொக்ஷனா-8ஏசி, லோ. துளசிகா-8ஏஎஸ், ச.சரண்யா-8ஏஎஸ், க.கேதுஷன்-7ஏ2பி, சி.திலக்சி- 7ஏ2பி, து.லக்சன்-7ஏபிசி, வே.லதீபா-7ஏபிசி, கி.சுயந்தினி-7ஏபிஎஸ், த.சரண்யா-7ஏ2சி, கி.பங்கயன்- 6ஏ2பிசி, வி.மேனகன்-6ஏ2பிசி, செ.நிரூபா-6ஏ2பிசி, உ.மோவிதா- 6ஏ2பிஎஸ், ஜெ.அ.ஜெனார்த்தனி- 6ஏபிசிஎஸ், அ.ஜசுந்தா-6ஏபிசி, மோ.திவிசனா-6ஏசி2எஸ், சு. சஞ்சிகா-5ஏ3பிசி, ப.கஜகரன்-5ஏ2பிசி, த.றேணுஜா-5ஏ2பிசிஎஸ், ச.பவித்திரா-5ஏபி2சிஎஸ்.

**உடுவில் மகளிர் கல்லூரி**

சு.ஆன்அபிஷாரா-9ஏ, சி.தர்சிகா- 9ஏ, ஜெ.மதுசாளினி-9ஏ, வி.பிரியங்கா-9ஏ, ஈ.யதுர்சிகா- 8ஏபி, சு.அபிநயா-7ஏ2பி, அ.வேர்ஜின் ஆரணி-7ஏ2பி, ச. பவதாரணி-7ஏ2பி, அ.பிறேமினி-7ஏ2பி, பா.ரோதிகா-7ஏ2பி, மு.நிதுலா- 7ஏபிசி, சி.சியாணுகா-6ஏ2பிசி, ஜெ.கௌதமி- 6ஏ3பி, ற.றம்மியா- 6ஏ2பிசி, இ. கெலனியா-6ஏ2பிசி, சி.திவ்வியப்பிரியா- 6ஏபி2சி, ம.சங்கவி- 5ஏ3பிஎஸ், கு. துவஸ்ரா- 5ஏ3பிஎஸ்,கு.அபர்ணா-5ஏ3பிஎஸ்

**யாழ்.அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

சி.ரேசினி-7ஏபிசி, உ.சர்மினி- 6ஏபி2சி, சி.தனுசா-5ஏ4பி, த.விதுசா -2ஏ6பிசி, க.சயந்தன்-ஏ3சி3எஸ்

**யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

சி.கம்சாயினி-9ஏ, ஸ்ரீ.விதுர்சினி-9ஏ, ந.மிதுனா-9ஏ, ந.லக்சிகா-9ஏ, தே.தேவாம்பிகை-9ஏ, வே.ஜதிஷ்வரியா-8ஏபி, கி.சர்மினி- 8ஏபி, பா.யதுகிரி-7ஏ2பி, பா.சிந்துஜா-7ஏ2பி, இ.சங்கவி-7ஏ2பி, ச.கஸ்தூரி-6ஏ2பிசி, ச.டனுசியா- 6ஏ2பிசி, கு.றக்சாயினி-6ஏபி2சி, சு.கீர்த்திகா-6ஏபிசிஎஸ், அ.தர் மிகா -6ஏ3சி, கெ.வினித்தா-5ஏ4பி, ஞா.கௌசிகா-5ஏ3பிசி, மா.மயூரி -5ஏ2பி2சி, த.நிரோசிகா-5ஏ2பிசிஎஸ், வா.ஜெயமிதுலா-5ஏ4பி,

**யாழ்.அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம்**

இ.இலைக்சனா-6ஏபி2சி, பா.நித்யா-3ஏபி4சிஎஸ், த.தர்சனா-3ஏ4சி2எஸ், ஆ.தரிசனா- 2ஏ4பி2சி, பி.நிதுர்சன்-3ஏ5சிஎஸ், த.சாணுகன்-2ஏபி3சி2எஸ், ஆ.தரிசனன்-3ஏபி3சிஎஸ், ப.ஜெயக்குமார்-3ஏ2பி2சிஎஸ், சே.மதுஷன் - 2ஏ2பி3சிஎஸ், ச.சுரேசன்-2ஏ2பி2சிஎஸ், த.தாரிகா-2ஏ2சி3எஸ், த.சியானுசா-2ஏ3சி2எஸ், கோ.உதயராஜா -ஏ2சி4எஸ், இ.நிஷாந்தன் - 4ஏபி2சிஎஸ், வி.திலைக்சனா - 2ஏ2சி4எஸ், ம.துவாரகா -2ஏ2சி2எஸ், த.தர்ஷன் -ஏ2சி3எஸ், தி.தனுசன்-2ஏ2பி3சிஎஸ்.

**யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி**

ஜி.ரகுராஜ்-9ஏ, கே.நிமல்ராஜ்- 8ஏசி, கே.தசிகன்-8ஏஎஸ், ஆர்.விதுர்சனன்-6ஏ3பி, கே.ஜதிசன்-6ஏ2பிசி, எஸ்.சாய்குமார்- 4ஏ3பிசிஎஸ், எஸ்.கோகுலன்-4ஏ2பி2சி, எஸ்.யதுர்தன்-3ஏ4சிஎஸ், பி.தனோஜா-3ஏ4பி2சி, ஆர்.ஆரணி-3ஏ3பி2சி, ஆர்.கோகுலராஜ்-2ஏ6பிஎஸ்.

**யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

பி.சஞ்சிகாயினி-9ஏ, ஜே.டிலக்ஷன்-7ஏ2பி, ஆர்.சஞ்சயன்-7ஏபிஎஸ், ஏ.கிரிஷாந்-7ஏசிஎஸ், எஸ்.நிலக்ஷன்-5ஏபி2சிஎஸ்.

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

ச.அருந்ததி 9ஏ, சி.திலக்ஷனா - 9ஏ, பு.யோசலா - 9ஏ, சு.பிரசாளினி - 8ஏசி, சி.அனுசியா - 8ஏசி, ஜெ.கஸ்தூரி - 8ஏசி, வி.கீர்த்தனா - 8ஏபி, சி.நிருபா - 8ஏபி, லோ.சுபாங்கினி - 8ஏபி, ச.வைஷ்ணவி - 8ஏபி, த.லஜிதா - 7ஏ2பி, தே.நிஷானந்தி - 7ஏ2பி, ந.ருஷானி - 7ஏ2பி, ந.நிவேதா - 7ஏ2பி, ர.துவாரகா -7ஏ2பி, கை.பானுமதி- 7ஏ2பி, ச.நிஷாந்தினி - 7ஏபிசி, க.நிதுஷா - 7ஏபிசி, வ.வர்சிகா - 7ஏபிசி, ந.கிருஷிகா - 6ஏ3பி, சி.மயூரி - 6ஏ3பி, ர.ஷாரங்கா - 6ஏ3பி, ஜெ.ஜீவனா - 6ஏ2பிசி, ர.சஜிதா - 6ஏ2பிசி, ஜெ.பவகரனி - 6ஏ2பிசி, ச.யதுஷிகா - 6ஏ2பிசி, ர.பவதாரணி - 6ஏ2பிசி, சி.சங்கவி - 6ஏ2பிசி, வி.சசிரேகா - 6ஏ2பிசி, ஜெ.சங்கீதா - 6ஏ2பிசி, பா.துளசிகா - 6ஏ2பிசி, ச.நிருபிகா - 6ஏ2பிசி, மு.மதுமிதா - 6ஏ3சி, சி.சாய்சங்கவி -6ஏ2பி.

**யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி**

ச.துரிகா - 9ஏ, தே.யுபீரதன் - 9ஏ, ஞா.பவித்ரா 9ஏ, சி. வசீகன் - 9ஏ, மா.லக்ஷாயினி - 8ஏசி, சு.லவண்யா - 8ஏஎஸ், ஜோ.சப்தனா - 8ஏசி, சி.சிவானி - 8ஏஎஸ், ரா.சோவினி - 8ஏபி, க.சுலக்ஷனா - 8ஏசி, த.யதுஷாயினி - 8ஏஎஸ், ம.கீர்த்தனா - 8ஏபி, ம.தனுயன் - 8ஏசி, வே.தேனுஜன் - 8ஏஎஸ், சு.கஜீபனா - 8ஏ, ம.சங்கீதன் - 8ஏபி, த.பிரியங்கன் - 8ஏபி, கீ.சகாஜராஜ் சில்வா - 8ஏபி, ச.துஷிதரன்- 8ஏபி, மு.ஹர்னன் - 8ஏபி, எ.ஜெனீபர் கஸ்ரிகா - 7ஏசிஎஸ், பா.அனித்தா - 7ஏபிசி, பா.மதுஷாயினி - 7ஏ2பி, சி.சோபனா - 7ஏபிஎஸ், கு.விதுஷா - 7ஏபிசி, பொ.கீர்த்தனா - 7ஏபிஎஸ், நி.நிலோஜினி - 7ஏபிஎஸ், ர.ரதியா 7ஏ2சி, செ.தேனுப்பிரியா - 7ஏபிஎஸ், வி.பிரகாஷ் - 7ஏசிஎஸ், த.ருஷாந்தன் - 7ஏசிஎஸ், கோ.சேயோன் - 7ஏ2பி, சி.தர்சன் - 7ஏசிஎஸ், க.அபராகிதன் - 7ஏ2பி, உ.நிமலதாஸ் - 7ஏபிசி, சி.விதுஷ் - 7ஏபிஎஸ், மு.கேதுஷன் - 6ஏ2பிசி, சே.கஜபிரியன் - 6ஏ2பிசி, ஜெ.லிதுனா - 6ஏ2பிசி, வி.நிஷாலினி - 6ஏ3சி, கு.கம்சிகா - 6ஏ2பிசி, சி.கயானி - 6ஏ2பிசி, ந.சிவந்தினி - 6ஏ2பிசி, ரா.பவதாரணி - 6ஏபிசிஎஸ், செ.யதிஸ்கா - 6ஏபிசி, த.சரண்யா - 6ஏபிசிஎஸ், த.தீபிகா - 6ஏ2பிஎஸ், கு.பிரஷாந் - 6ஏ2சிஎஸ், வி.ரதுஜன் - 6ஏசி, ரா.சுஜன் - 6ஏபிசிஎஸ் , சா.தனேஷ்குமார் - 6ஏ3பி, அ.ஜெய்திலகா - 6ஏபி2சி, ந.பானுஷன் - 6ஏ2பிஎஸ், வ.சுபகீதன் - 6ஏபிசிஎஸ், உ.கதீசன் - 6ஏ3பி, ம.லதாங்கினி - 5ஏ3பிசி, ர.சிவசோதிகா - 5ஏ3சிஎஸ், பி.கம்ஷப்பிரியா 5ஏ2பி2சி, நி.அஜிகரன் - 5ஏ2பி,சி,எஸ்,ஆ.அபிஷன் - 5ஏ3பி,சி, அ.சுஜிகரன் - 5ஏபி3சி

**யாழ்.ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை**

ஆங்கிலமொழி முலம் 9ஏ பெற்றோர்

வ.அனுஷன், கு.மலன்பன், தி.மிருதுலன், ந.ரமணன், பி.திவ்விகன், ந.விதுஷன்

தமிழ்மொழி மூலம் 9ஏ பெற்றோர்

ஜெ.சாரங்கன், தி.சுஜீவன், த.தபிஷேக், ந.வின்சன், கு.கஜவன், சி.யதுர்ஷன், செ.கௌரிசான், யோ.ரஜிவன், செ. வினுயன், க.கஜானன், சி.ரமணன், ச.சன்கமன், றொ.ஜெனிஸ்ரன்.

ஆங்கிலமொழி முலம்

வ.அரிராஜ் - 8ஏபி, அ.அனோசன்-8ஏபி,ரயதுர்சன்-8ஏபி,ஜெஜெனோஷன்-8ஏபி, அ.கோபி நாத் -8ஏபி, சி.நிவேர்யன்-8ஏபி, வ.உமைபாலன் -8ஏபி, ர.பிரன்யன் -8ஏசி.

தமிழ்மொழி மூலம்

மு.அபிராம்- 8ஏபி, ரா.பிரதீப்- 8ஏபி, சி.சாரங்கன்-8ஏபி, ஜெ.ஜெயவர்மன் -8ஏசி, சி.கோகுலன்-8ஏபி, பா.மாதவன்- 8ஏபி, பா.நவநீதன்- 8ஏஎஸ், அ.நிதர்ஷன்- 8ஏபி, தே.தயானன் -8ஏசி, ச.அபிராம்- 8ஏபி, த.சாருகன் -8ஏபி, சி.சுஜீபன்- 8ஏஎஸ், யோ.சுஜீவன்- 8ஏசி, சி.ஆர்த்திகன்-8ஏசி,

ஆங்கிலமொழி மூலம்

பா.ஆனந்த்- 7ஏபிசி, வ.ஹரிராஜ்-7ஏபிசி, த.ஜெயகுமாரன் - 7ஏபிசி, ப.கஜந்த்- 7ஏபிசி, ர.குருபரன் - 7ஏ2பி, உ.லக்ஷன்- 7ஏ2பி, க.நர்த்தனன்- 7ஏபிசி, சி.பவித்திரன்-7ஏ2பி, செ.சிந்துராசன்- 7ஏபிஎஸ், அ.வாதவூரன்- 7ஏபிசி.

தமிழ்மொழி மூலம்

நா.சங்கீதன்-7ஏபிஎஸ், ஜெ.ஆர்த்தனன்-7ஏபிசி, க.கஜவர்ணன்- 7ஏ2பி, சி.குகநிஷாந்தன்-7ஏ2பி, கி.நாகராசன்-7ஏபிசி, சி.நிதுஷன்- 7ஏபிஎஸ், சி.தினேஷ்குமார்-7ஏ2சி, ஜெ.தர்சிகன்- 7ஏபிசி, ம.அனிஸ்ரன் றொமிலாஸ் -7ஏபிசி

**யாழ்.இந்துக் கல்லூரி**

9ஏ தமிழ்மொழி மூலம்

அ.அபிநந்தன், ப.அஞ்சுதன், பா.வெஸ்லிபுத்மநிரோஷன், ஜெ.கிருஷிகா, க.லிதுர்ஷன், ம.அஜய், மு.நிதுயன், நா.தேனுஜன், ந.பானுஜன், ப.நிருதிகன், பா.ரஜிவ், பி.சனுஜன், ரா.ஆதிரையன், ர.வுதுர்ஷன், ரா.பவிராம், ரா.அபிஷதன், ர.கிருஷாந்தன், ச.பிரவீனா, சி.தர்சிகன், ஸ்ரீ.விஸ்ணுஜன், ஸ்ரீ.சஜிவன், த.நிதுஷிகன், உ.விதுஸ்ஷன், வ.பவிதரன்.

9ஏ- ஆங்கிலமொழி மூலம்

ஆ.ஜனுஷன், அ.ஹரிஷாந், இ.இளங்கேதன், ஜெ.சஜீபன், க.ஜெனார்த்தனன், ப.கோபிநாத், ரா.கனிஷ்கர், ர.யதுர்ஷன், ச.பிருந்தாபன், ஸ்ரீ.நதிஸ்கர், சி.பவித்திரன், சி.தர்மதாஸன்,

8ஏ

அ. சுயானஸ்ரீசயன், கோ.துவாகரன் , க.சஜிவரன், இ.அரண், ஜெ. திரிஷாந், ஜெ.வேனுயன், க.பிரபன், க.சுஜன், கி.வனசியன், கி.மதுராங்கன், கு.டிலுக்ஷன், ம.கீர்த்தனன், நா.தமிழ்இன்பன், ந.பிரியங்கன், நி.ஆதவன், ப.நக்கீனன், பி.யாதவன், பி.நிஷாங்கன், பி.கஜியந்தன், ர.பானுஜன், செ.ரவீந்திரன், சி.நிஜன், சி.பிரணவன், சி.குகேஷன், சு.காருணியன், த. கபிஷாந், த.மதுமிலன், தெ.அபிஷாந், வி.அபிநயன், வி.டினோஜன், வி.மால்மருகன், வ.சேதுபவன்

7ஏ பெற்றோர்

சி.கஜவதனன், பு.பிரவீன், சி.ரகுராஜ், ந.துஷ்யந்தன், ம.சுவேதன், கி.கோபிசன், ம.ஜெயராம், மோ.பிரசாந், யோ.சாத்வீகன், சி.சிவகஜன், து.அச்சுதன், ஸ்ரீ.அருள்ராஜ், ந.சுமுகன், கு.கார்த்திகன், ச.கவிவர்மன், கோ.மலரவன், த.நிஷாந், ந.நிதர்ஷன், ப.பானுஜன், க.ஸ்ரீநிகேதன், சொ.திருக்குமரன், ஞா.தூரியன், க.விதுசன், இ.சிந்துஜன், ஸ்ரீ.சுபாஸ், வ.வத்சலயன், த.விரோசன், அ.அபிராம், அ.கஜானன், வ.கம்சானந், பா.ரரேன், கோ.ஸ்ரீபதி அதிகரம், கே.சுதானந்.

(இ-9-23-60)

# அக்னிப் பரீட்சையாகும் ஆர்.கே.நகர்

ஆர்.கே.நகர் இடைத் தேர்தலின் இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியாகிவிட்டது. ஏப்ரல் 12இல் நடக்கவிருக்கும் இந்தத் தேர்தல் அ.தி.மு.க தவிர்த்த மற்ற கட்சிகளுக்கு மற்றுமொரு தேர்தலாக இருக்கலாம். ஆனால், இரு அணிகளாகப் பிளவுபட்டிருக்கும் அ.தி.மு.கவைப் பொறுத்தவரை, இத்தேர்தல் அவர்களது எதிர்காலத்தையே தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

கட்சியையும் ஆட்சியையும் தம்வசம் வைத்திருக்கும் சசிகலா அணிக்குத் தொண்டர்கள், மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை என்று ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார். அதை நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது. மறுபுறம் சசிகலா தரப்புக்கும் இது ஒரு சவால். ஆக, ஒரு பலப்பரீட்சையாக இத்தேர்தல் களம் அமைந்திருக்கிறது. இரண்டு அணிகளுமே தங்களுக்குத்தான் இரட்டை இலைச் சின்னம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்த நிலையில், தேர்தல் ஆணையம் இரண்டு அணிகளுக்குமே சின்னத்தை மறுத்திருக்கிறது.

இவ்விவகாரத்தில் தேர்தல் ஆணையம் இறுதி முடிவு எடுப்பதைத் தள்ளிவைத்திருந்தாலும் இந்தத் தேர்தலில் இரட்டை இலையை முடக்கிவைத்தது அக்கட்சியின் பிரதான அணியான சசிகலா அணிக்கு ஒரு பெரும் பின்னடைவு. இரு அணிகளுக்கும் பாரபட்சம் காட்டாமலேயே இந்த நடவடிக்கையைத் தேர்தல் ஆணையம் எடுத்திருக்கிறது. இரட்டை இலைச் சின்னத்தைப் போன்றே தோற்றமளிக்கும் இரண்டு விளக்குகளைத் தாங்கிய 'மின் கம்பம்' சின்னத்தை பன்னீர்செல்வம் அணி தேர்ந்தெடுத்திருப்பது ஒருவகையில், அவர்களுக்குக் கிடைத்திருக்கும் இன்னொரு அனுகூலம் என்றே சொல்ல வேண்டும்.

வேட்பாளர் தேர்விலும், அந்தத் தொகுதியோடு நீண்ட தொடர்புடைய மதுசூதனனைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் புத்திசாலித்தனமாகக் காய் நகர்த்தியிருக்கிறது பன்னீர்செல்வம் அணி. சசிகலா அணி கட்சியின் துணைப் பொதுச்செயலாளராக சசிகலாவால் நியமிக்கப்பட்ட அவருடைய அக்கா மகன் தினகரனையே வேட்பாளராகக் களம் இறக்கியிருக்கிறது. மிகத் துணிச்சலான, அதே அளவுக்கு அபாயமும் மிக்க ஒரு முடிவு என்று இதைச் சொல்லலாம்.

ஆளுங்கட்சிக்குள் வெடித்திருக்கும் பிளவு இயல்பாக தனக்கான வெற்றியாக மாறும் என்று கணக்கிட்டு ஒரு புதிய முகத்தைக் களமிறக்கியிருக்கிறது தி.மு.க.கட்சி. மு.க.ஸ்டாலின் முழுத் தலைமையின் கீழ் வந்த பின் அது சந்திக்கும் முதல் தேர்தல் இது.

பொதுவாக இடைத் தேர் தல்களின் வெற்றி, தோல்விகள் பெரிய அளவில் தொடர் பேசுபொருளாகவும் அரசியல் திசை மாற்றக் காரணியாகவும் மாறுவதில்லை. அரிதாக அப்படி உருவாகும் சூழல், இப்போது தமிழகத்தில் இந்தத் தேர்தலில் உருவாகியிருக்கிறது. இந்தத் தேர்தலில், யார் வெற்றி பெறுவார்கள் என்பதைக் காட்டிலும் அ.தி.மு.கவின் இரண்டு அணிகளில் வாக்குகள் வரிசையில் எது முன்னணி வகிக்கப்போகிறது என்பதும்கூடத் தமிழக அரசியலில் புதிய போக்குகளை உருவாக்கக் கூடும்!?

நன்றி: த ஹிந்து

# எதிர்ப்புக்கு மத்தியில் எரிவாயு திட்ட ஒப்பந்தம் கைச்சாத்து



தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு திட்டத்தை செயற்படுத்த கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில், அந்தத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம், நேற்று முன்தினம் டில்லியில் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமையில் கையெழுத்தானது.

நாடு முழுவதும் கண்டுபிடிக்கப்பட்ட சிறு எண்ணெய் வயல்கள் 2016 திட்டத்தில், 31 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதன் மூலம், 46 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய தர்மேந்திர பிரதான், 2022 ஆம் ஆண்டு இந்தியாவின் எரிசக்தி இறக்குமதியை 10 சதம் குறைக்க வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் இலக்கை அடையும் ஒரு படியாக இத் திட்டம் செயற்படுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு திட்டத்துக்கான ஒப்பந்தம், ஜெம் லெபாரட்ரீஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

எரிவாயுத் திட்டத்துக்கு எதிராக நெடுவாசல் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களில் போராட்டம் நடைபெற்று வந்தது. அது நிலத்தடி நீரை மாசுபடுத்துவதுடன், விவசாயத்தின் அழிவுக்கும் வழி வகுக்கும் என்று போராட்டத்தினர் அச்சம் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களுடன் மத்திய இணை அமைச்சர்கள் பொன். ராதாகிருஷ்ணன், நிர்மலா சீதாராமன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, தமிழக அரசு, மத்திய அரசுடன் ஆலோசனை நடத்தி, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் கவலைகளைத் தீர்த்த பிறகுதான், அத் திட்டம் செயற்படுத்தப்படும் என்று உறுதியளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# எந்த தீய சக்தியாலும் எனது லட்சிய பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது

## 'ஜெ' தீபா தெரிவிப்பு



ஆர்.கே.நகர் தொகுதிக்கு உட்பட்ட புதுவண்ணாரப்பேட்டை ஏ.ஜி. கோவில் தெருவில் எம்.ஜி.ஆர். அம்மா தீபா பேரவை சார்பில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

இந்தத் தொகுதியில் போட்டியிடும் ஜெ.தீபா தன்னை அறிமுகப்படுத்தி தேர்தல் அறிக்கை வெளியிடுவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனால் தமிழகம் முழுவதும் தீபாவின் ஆதரவாளர்கள் மாலை 5 மணிக்கே கூடினர். கூட்டத்தில் நிர்வாகிகள் ஒவ்வொருவராக பேசிக்கொண்டிருந்தனர். தீபாவின் வருகைக்காக ஆதரவாளர்கள் காத்திருந்த நிலையில் இரவு 8.45 மணிக்கு அவர் மேடைக்கு வந்தார்.

தீபா ஆவேச உரை நிகழ்த்துவார் என்று ஆவலுடன் தொண்டர்கள் எதிர்பார்த்திருந்தனர். தீபா 9.20 மணிக்கு பேசத் தொடங்கி 9.35 மணிக்கு பேச்சை முடித்தார். 15 நிமிடமே அவர் உரையை நிகழ்த்தினார். இது காத்திருந்த ஆதரவாளர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

புரட்சித்தலைவர் எம்.ஜி. ஆரால் உருவாக்கப்பட்ட அ.தி.மு.க. மறைந்த முதல்வர் 'அம்மா'வால் வளர்க்கப்பட்டது. உன்னை பிரிந்து வாழும் எண்ணற்ற பிள்ளைகள் உண்டு. நீங்கள் பெற்றெடுத்த பிள்ளையாகிய நான் மக்களுக்காக உழைப்பேன். எந்தத் தீய சக்தியாலும் எனது லட்சிய பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது. என் பொது வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணிப்பேன்.

ஒழுக்க நெறியுடன் உழைத்து அதன்படி ஆட்சி செய்வேன். தெற்காசிய நாடுகளுக்கு சென்று பல ஆராய்ச்சி படிப்புகளை படித்து பட்டம் பெற்று இருக்கிறேன். அதன் மூலம் விருதுகளும் வாங்கி இருக்கிறேன். ஆனால் நீங்கள் அளிக்கும் சட்டமன்ற உறுப்பினர் பட்டம்தான் எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியை தரக்கூடியது.

இந்த தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் துரோகிகள் கூட்டத்தை ஒழித்து அவர்களின் முகத் திரையை கிழிப்பேன். எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா வளர்த்த இந்தக் கட்சியை கட்டிக் காப்பேன்.

'அம்மா' விட்டுச் சென்ற பணிகள், தொண்டுகளை என் வாழ்க்கையின் சபதமாக ஏற்கிறேன். என்னுடைய அரசியல் ஆசான் எம்.ஜி. ஆரும், அம்மாவின் ஆசியுடன் இந்த தொகுதியில் போட்டியிடுகிறேன். படகுச் சின்னத்தில் என்னை வெற்றி பெற செய்யுங்கள் என தீபா மேலும் தெரிவித்தார். (இ-12)

# அணு ஆயுதப் பரவல் தொடர்பில் இந்தியா-ரஷ்யா பேச்சுவார்த்தை

(டில்லி)

ஆயுதக் குறைப்பு மற்றும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு தொடர்பான இந்தியா, ரஷ்யா அதிகாரிகள் இடையிலான ஆண்டு பேச்சுவார்த்தை தலைநகர் டில்லியில் நடைபெற்றது.

ஆயுதக் குறைப்பு மற்றும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு தொடர்பாக இந்தியா அவ்வப்போது பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் இந்தியா, ரஷ்யா இடையிலான ஆயுத குறைப்பு மற்றும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு தொடர்பான ஆண்டு பேச்சுவார்த்தை தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஆயுதங்களை குறைப்பது மட்டுமல்லாமல் தீவிரவாதம் தொடர்பாகவும் இந்த பேச்சுவார்த்தையில் ஆலோசனை செய்யப்பட்டது.

அணுசக்தி விநியோகஸ்தர் குழுவின் இந்தியா இடம்பெறும் விவகாரத்தில் சீனாவை இணங்க வைக்க ரஷ்யா முயற்சி செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ-12)

# அரசிற்கு அழுத்தம் கொடுக்க 10 தீவிர பௌத்த அமைப்புக்கள் இணைந்து செயற்பட தீர்மானம்

அரசாங்கத்துக்கு எதிராக தனித்தனியாக தேசிய ரீதியில் செயற்பட்டு வரும் சகல பௌத்த மத அமைப்புக்களையும் ஒன்றிணைத்து, அரசாங்கத்துக்கு எதிரான பாரிய சக்தி வாய்ந்த அமைப் பொன்றை உருவாக்க தீர்மானித்துள்ளதாக பெவித்தி ஹண்ட அமைப்பின் தலைவரும் அரச தாதியர் சங்க இணைப்பாளருமான முரத் தட்டுவ ஆனந்த தேரர் அறிவித்துள்ளார்.

இந்த பௌத்த சக்தியில் தேசிய ரீதியில் உள்ள 10 இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் ஒன்றிணையவுள்ளதாகவும், இந்த சக்தி குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் சிங்கள புத்தாண்டு தினத்தின் பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும் ஆனந்த தேரர் நேற்று முன்தினம் குறிப்பிட்டுள்ளார்.

மகாநாயக்க தேரர்களின் ஆசீர்வாதத்துடன், இந்த பௌத்த சக்தியின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். நாட்டிலுள்ள 5 ஆயிரம் பிக்குகளை ஓரிடத்தில் கூட்டி நாட்டுக்குத் தேவையான பல தீர்மானங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் தேரர் கூறியுள்ளார். தற்போதைய அரசாங்கம், அரசாங்கத் தின் தனியார் மயப்படுத்தும் திட்டம், புலனாய்வுத் துறையினரைப் பழிவாங்கும் நடவடிக்கை, நாட்டுக்கு எதிரான அரசியல் யாப்பு உருவாக்கம் என்பவற்றுக்கு எதிராக இந்த பௌத்த சக்தி செயற்படவுள்ளது.

நேற்று முன்தினம் முரத் தட்டுவ ஆனந்த தேரர் தலைமையில் நாரஹேன்பிட்டி அபயராம விஹாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரும் கலந்துகொண்டார். (இ-7)

# பதிவு செய்யப்பட்ட சகல அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று அழைப்பு

(கொழும்பு)

விசேட கலந்துரையாடல் ஒன்றுக்காக பதிவு செய்யப்பட்ட கட்சிகள் அனைத்தினதும் செயலாளர்கள் சகலருக்கும் இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த கலந்துரையாடல் இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்தும் தள்ளிப் போடப்பட்டு வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தும், நிறைவடையவுள்ள மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (இ-7)



# விமலைப் பார்வையிட வரையறைகள் சிறைச்சாலை திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை பார்வையிட வருபவர்களை மட்டுப்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினமும் இவரைப் பார்ப்பதற்கு பெரும் தொகையானோர் வருகை தந்துள்ளதாகவும் இதனையடுத்தே இந்தத் தீர்மானம் பெறப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷான் டனசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தவகையில், குடும்ப உறுப்பினர்கள் மாத்திரம் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் வைத்தியசாலைக்கு சமுகமளிக்க முடியும்.

பாராளுமன்ற சிறப்புரிமை பெற்றுள்ள எம்.பிகளும் குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே பார்வையிட முடியும் எனவும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-7)

### ஒருமணி நேரத்தில் 211 மி.மீ. கனமழை

# அவுஸ்திரேலியாவை ஆட்டங்காண வைத்த பேரழிவுப் புயல் ‘டெபி’





டெபி என்ற 4 ஆம் எண் வலுவுள்ள புயல் அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு கடற்கரையை நேற்றுக் கடந்தது. இதனால் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது.

கோரத்தாண்டவமாடிய டெபி ‘பேரழிவு’ புயல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வானிலை ஆய்வு மையத் தகவலின் படி போவென், ஏர்லி கடற்கரைப்பகுதிகளை அது கடக்கும் போது மணிக்கு 270 கி.மீ. வேகத்தில் கடும் காற்று வீசும்.

குவீன்ஸ்லாந்தை டெபி புயல் தாக்கியுள்ளது. கடும் மழையும் பெய்து வருகிறது. பெருவெள்ளத்திற்கான சாத்தியங்களும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

4 ஆம் எண் புயற்காற்று 3 ஆம் எண் சூறாவளிக்குச் சமமானது.

கடற்கரை தீவுப் பகுதிகளை புரட்டிப் போட்டு விட்டது. டெபி புயலால் ஏகப்பட்ட மரங்கள் விழுந்தன.

குடியிருப்புகளில் வீடுகள் ஆட்டம் கண்டன, ஜன்னல் கண்ணாடிகள் பறந்தன. வீட்டு மேற்கூரைகள் பறந்தன. கடற்கரைகள் வெள்ளக்காடாக மாறியுள்ளன. ஒரு மணி நேரத்தில் 211 மி.மீ. மழை பதிவாகியுள்ளதாக குவீன்ஸ்லாந்து தலைவர் அனாஸ்டேசியா பலாஸ்சுக் தெரிவித்தார்.

இது நூறாண்டுக்கு ஒரு முறை நிகழும் நிகழ்வு என்கிறார் அவர்.

இதில் பெரிய அளவில் உயிர்ப்பலி இல்லை என்றாலும் 31 வயது பெண்மணி ஒருவர் பிராசர்பைன் என்ற நகரில் பலியானார்.

மிகவும் மெதுவாக கரையைக் கடந்த இந்தப் பெரிய புயலின் விளைவினால் மீட்புப் பணிகள், உதவிகள் தாமதமாகத்தான் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரம் துண்டிப்பு, தொடர்புக் கருவிகளின் செயலின்மை, புயல் வீசும் பகுதிகளில் உள்ளவர்களை பெரும் பதற்றத்திற்கு ஆளாக்கியுள்ளது. (இ-12)




## மெக்ஸிக்கோவில் இனந்தெரியாத 45 சடலங்கள் மீட்பு

மெக்ஸிக்கோவின் தெற்கு மாநிலமான மொரேலொஸின் (Morelos) கல்லறையொன்றிலுள்ள புதைகுழியிலிருந்து, சுமார் 45 இனந்தெரியாத சடலங்களை தடயவியல் நிபுணர்கள் கண்டெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலங்கள் புதைக்கப்பட்டமையின் பின்னணியில் சில அதிகாரிகளும் இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட 45 சடலங்களும் தடயவியல் ஆராய்ச்சி செய்யும் தளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவை கண்டெடுக்கப்பட்ட புதைகுழியில் மேலும் பல சடலங்கள் இருக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதுபோன்று கடந்த வருடம் மொரேலொஸில் உள்ள புதைகுழியொன்றிலிருந்து சுமார் 100இற்கும் மேற்பட்ட இனந்தெரியாத சடலங்கள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மெக்ஸிக்கோவின் மொரேலொஸ் எனும் பகுதியிலேயே அதிகளவான கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

## ரஷ்யாவில் அரசுக்கு எதிராகப் போராட்டம்; எதிர்க்கட்சித் தலைவருக்கு 15நாட்கள் சிறை

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவில் ஊழல் மலிந்து விட்டதால், பிரதமர் பதவியில் இருந்து டிமிட்ரி மெத்வதேவ் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி எதிர்க்கட்சி சார்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை போராட்டம் நடைபெற்றது.

தலைநகர் மொஸ்கோவில் நடந்த போராட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி தலைமை தாங்கினார். போராட்டங்களில் ஏராளமானோர் திரளாக கலந்து கொண்டனர்.

கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பெரிய அளவிலான போராட்டமாக இது இருந்தது. இதனையடுத்து அலெக்சி நவால்னி உட்பட போராட்டத்தில் ஈடுபட்ட 1000 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு கைதான அலெக்சி நவால்னி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 15 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும்



தான் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னி எதிர் வரும் 2018 ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் புடினை எதிர்த்து போட்டியிடவுள்ள நிலையில் அவர் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நவால்னி புடினுக்கு எதிராக வெற்றி பெறுவதற்கு சிறிதளவு வாய்ப்பு உள்ளதாக கருதப்படுகிறது. (இ-12)

## நடுக்கடலில் தத்தளித்த 1200 பேர் மீட்பு



லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறும் நோக்கத்தில் படகுகளில் சென்று நடுக்கடலில் தத்தளித்த சுமார் 1200 குடியேறிகளை இத்தாலி நாட்டு கடற்படையினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர். (இ-12)

### ஜேர்மனி அருங்காட்சியகத்தில்

## 100 கிலோ கிராம் எடையுள்ள தங்க நாணயம் கொள்ளை!




ஜேர்மனி தலைநகர் பேர்லினில் அருங்காட்சியகம் உள்ளது. இங்கு 100 கிலோ எடையுள்ள தங்க நாணயம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த தங்க நாணயம் நேற்று முன் தினம் இரவு கொள்ளை போனது. அதன் மதிப்பு 4 மில்லியன் டொலர் (ரூ.3 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொள்ளை போன நாணயம் கனடா அரசால் கடந்த 2007 ஆம் ஆண்டு வழங்கப் பட்டது. இதற்கு ‘பெரிய பனை ஓலை’ என பெயரிடப்பட்டிருந்தது.

அதில் ராணி 2 ஆவது எலிசபெத்தின் உருவப்படம் பொறிக்கப்பட்டிருந்தது. சுத்த தங்கத்தால் இது உருவாக்கப்பட்டிருந்தது. எனவே இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் மங்கள்யான் விண்கலம் ஆய்வு



செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ்வதற்கான சூழல் இருப்பதாக ‘மங்கள்யான்’ விண்கலம் செய்த ஆய்வில் தெரியவந்துள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி ‘மங்கள்யான்’ என்ற விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பியது. இதனை விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தலைமையிலான விஞ்ஞானிகள் வெற்றிகரமாக செய்து முடித்தனர்.

10 மாத பயணத்துக்கு பிறகு கடந்த 2014 ஆம் ஆண்டு செப்டெம்பர் 24 ஆம் திகதி அந்த விண்கலம் செவ்வாய்க் கிரக சுற்று வட்டப் பாதையை அடைந்தது. தன்னுடைய ஆயுள் காலத்தையும் கடந்து செவ்வாய்க் கிரகத்தை சுற்றிவரும் ‘மங்கள்யான்’ செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆய்வு முடிவுகளை பூமிக்கு அனுப்பிவைத்து வருகிறது.

முதல் முயற்சியிலேயே செவ்வாய்க் கிரக சுற்று வட்டப் பாதைக்கு விண்கலத்தை வெற்றிகரமாக அடையச் செய்த ஒரே நாடு என்ற பெருமையை இச்சாதனை மூலம் இந்தியா பெற்றுள்ளது. (இ-12)

# இலங்கை-அமெரிக்க மரைன் கொமாண்டோக்கள் மீண்டும் இலங்கையில் கூட்டுப் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 'மரைன்' பற்றாலியனுடன் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு அமெரிக்க கடற்படையின் 'மரைன்' படைப் பிரிவினருடன், 'யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக்' என்ற தரையிறக்க கப்பல் கொழும்பு துறைமுகத்துக்குச் வந்துள்ளதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

அமெரிக்க கடற்படையின் 'யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக்' என்ற தரையிறக்க கப்பல் நான்கு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

இதில்வந்துள்ள 11 'மரைன்' விரைவுப்படைப் பிரிவைச் சேர்ந்த 375 'மரைன்' படையினர் மற்றும் மாலுமிகள், இலங்கை கடற்படையின் 175 'மரைன்' படையினர் மற்றும் மாலுமிகளுடன் இணைந்து, கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

மனிதாபிமான உதவி மற்றும் அனர்த்த மீட்பு நடவடிக்கைகளின் போது, வெற்றிகரமான நகர்வு மற்றும் விநியோக நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்தே இந்தக் கூட்டுப் பயிற்சியில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இலங்கை கடற்படையுடன் 11 'மரைன்' விரைவுப் படைப் பிரிவு மேற்கொள்ளும்- இராணுவங்களுக்கு இடையிலான இரண்டாவது பயிற்சி பரிமாற்ற நடவடிக்கை இதுவாகும்.



ஏற்கனவே 'யுஎஸ்எஸ் சோமசெற்' என்ற 11 'மரைன்' விரைவுப் படைப்பிரிவைச் சேர்ந்த கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் தரித்து நின்று இலங்கை கடற்படையின் 'மரைன்' கொமாண்டோக்களுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொண்டிருந்தது.

அதேவேளை, 'யுஎஸ்எஸ் கொம்ஸ்ரொக்' கப்பல், இலங்கை கடற்படையுடன் இணைந்து பயிற்சி நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளது. சேதக் கட்டுப்பாட்டு முறைமைகள் குறித்து இலங்கை கடற்படையினருக்கு அமெரிக்க கப்பலில் பயிற்சிகள் அளிக்கப்படும் என்று அமெரிக்க கடற்படையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# விமல் வீரவன்ச எம்.பியின் இரத்த மாதிரி தனியார் ஆய்வுகூடத்தில் பரிசோதனை

சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் இரத்த மாதிரியை மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் எவ்வாறு வெளியிலுள்ள இரத்த பரிசோதனை நிலையம் ஒன்றுக்கு வழங்கினார் என்பது குறித்த விசாரணைகளை சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு கிடைத்த முறைப்பாடொன்றினை அடுத்து அவரின் ஆணையிடலின் கீழ் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் உள்ள ஒருவர் சிறைச்சாலை வைத்தியசாலையினுள் சிகிச்சை பெற்று வருகின்ற போது அவரின் இரத்த மாதிரி வைத்தியசாலையின் உள்ளேயே பரிசோதிக்கப்படும். அதற்கான வசதிகள் இல்லாத பட்சத்தில் மாத்திரம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் பொறுப்புடன் அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்படும்.

உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் இரத்த மாதிரிகளை பரிசோதிக்கும் செயற்பாடு எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பது குறித்து சிறைச்சாலைகள் புல்னாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நிஷான் தனசிங்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் வைத்தியசாலை வைத்தியர்கள் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய கடமை சுகாதர அமைச்சையே சாரும் என்பதால் சம்பவம் குறித்து உண்மை நிலையை கண்டறிந்து அதனை சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# போர்க்குற்றம் குறித்த விசாரணைகள் நல்லிணக்கத்தை ஊக்குவிக்காது

## கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார்



(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணைகள் நல்லிணக்க முயற்சிகளை ஊக்குவிக்காது என்றும் சமூகங்களுக்கிடையிலான இடைவெளியையே அதிகப்படுத்தும் என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தின் ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"விசாரணைகளையும், வெளிநாட்டு நீதிபதிகளையும் ஒரேநேரத்தில் கொண்டு வருவதன் மூலம், இந்த சமூகங்களை இணைக்க முடியும் என்று எவ்வாறு கூற முடியும்?

அவ்வாறு செய்ய நினைத்தால், அனைவருக்குமான நல்லிணக்கம் இருக்காது.

போருக்குப் பின்னர், எம்மால் என்ன செய்ய முடியும்? பின்னால் சென்று, இந்த விடயங்கள் பற்றிப் பேசினால், சமூகங்கள் ஒன்றுபடாது. அது இடைவெளியைத் தான் அதிகப்படுத்தும்.

தமிழர்கள் போர்க்குற்ற விசாரணை பற்றிப் பேசும் போது, பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள், பௌத்த மதகுருமார் மற்றும் பொலிஸ்துறையினரின் படுகொலைகள், போரின்போது தாம் எதிர்கொண்ட கொடூரங்கள் பற்றி பேசுவார்கள்.

அது போருக்குப் பிந்திய குணமாக்கல் செயற்பாடுகளின் வேகத்தைக் குறைக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உயர்மட்டக் குழு இலங். வருகிறது

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான, ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உயர்மட்டக் குழுவொன்று இந்த வாரம் இலங்கைக்குப் பயணம்மேற்கொள் ளவுள்ளது.

ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் தெற்காசியப் பிரிவுக்கான உதவித் தலைவர் அன்ட்ரூ மக் டோவல் தலைமையிலான உயர்மட்டக் குழுவே கொழும்பு வரவுள்ளது. இந்தக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மூத்த அமைச்சர்கள், வர்த்தக பிரமுகர்கள், இராஜதந்திர சமூகத்தினர், உள்நாட்டு, வெளிநாட்டு நிதி அமைப்புகள் ஆகியவற்றைச் சந்தித்து, இப்போதைய செயற்பாடுகள் மற்றும் எதிர்கால முதலீடுகள்குறித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

ஐரோப்பிய முதலீட்டு வங்கியின் உதவித் தலைவர் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். 2002ஆம் ஆண்டு தொடக்கம் ஐரோப்பிய முதலீட்டு வங்கி இலங்கையில் முதலீடுகளுக்கு ஆதரவளித்துவருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தேர்வு நேரம்

தேர்வு நேரத்தில் பல பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகளை எப்படி நடத்துவது என்றே தெரிவதில்லை.

படிக்கிற பிள்ளைகளை தேர்வு நேரத்தில் ஒரு நோயாளியைக் கவனிப்பது போல் கவனிக்க வேண்டும்.

முதல் கட்டமாக அவர்களைப் படிபடி என நச்சரிப்பதை விட்டுவிட வேண்டும். மனித சுபாவமே எதை வற்புறுத்துகிறோமோ அதற்கு நேர் எதிரிடையாகச் செய்வதுதான். குழந்தைகளுக்கு இது 100 சதவிகிதம் பொருந்தும். கட்டாயத்துக்காகப் படிக்கும் பிள்ளைகள் பெற்றோரை ஏமாற்றுவதோடு தங்களையும் ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

அப்படியானால் படிக்காத பிள்ளைகளை அப்படியே விட்டுவிடுவதா? என்பது உங்கள் கேள்வியா? இது நியாயமான கேள்வி.

பிள்ளைகளைக் கட்டாயப்படுத்துவதை விட்டுவிட்டு படிக்க வேண்டியதன் அவசியத்தை நயமாக எடுத்துச் சொல்ல வேண்டும். இன்னும் பதினைந்து நாள்தான், அப்புறம் நீ சுதந்திரப் பறவை என்கிற தொனியில் வயதுக்கு ஏற்றபடி எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஒரு சிறு தும்மல் போட்டாலும் உடனே டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டும். எது உடம்பிற்கு ஆகாதோ (தலைகுளியல், ஐஸ்) அவற்றை அன்போடு மறுக்க வேண்டும். இவை காரணமாக ஒரு தேர்வில் கலந்துகொள்ள முடியாமல் போனாலும் ஒரு வருடம் வீணாகிவிடும் என்பதால் பிள்ளைகளைவிட உடையவர்கள் தாம் விழிப்பாக இருக்க வேண்டும். ஒரு வருட முன்னேற்றம் நம் அலட்சியத்தால் பாதிக்கப்படக் கூடாது என்பது மிகமிக முக்கியம்.

அவர்களுக்குத்தான் தேர்வு; நமக்கென்ன? என்று கணவனும் மனைவியும் ஜாலியாக காற்று வாங்கப் போய்விடக் கூடாது.

சினிமா உல்லாசப் பயணம்? ஊகும் மூச் ! உறவினர் திருமணம் என்றால் கூடப் பிள்ளைகளை அதிகமாகக் கவனித்துக் கொள்ளக்கூடிய மனப்பண்பு உள்ள ஒருவர் வீட்டிலேயே தங்கிவிட வேண்டும்.

நீ படி என்று கதவைச் சாத்திவிட்டு நாம் தொலைக்காட்சி பார்க்க உட்கார்ந்துவிடக் கூடாது. பிள்ளைகளின் நலனுக்காக நாமும் விரதம் இருக்க வேண்டும். நமக்காகத்தான் பாவம் அம்மாவும் அப்பாவும் தொலைக் காட்சியில் நிகழ்ச்சிகள் பார்க்கவில்லை என்ற உண்மை பிள்ளைகளுக்குத் தெரிய வர வேண்டும்.

பிள்ளைகள் கண்விழித்துப் படித்தால் இடையிடையே எழுந்து ''டீ போட்டுத் தரவா? முகம் கழுவிக்கோ!'' என்று ஆறுதலாகவும் அனுசரணையாகவும் பேச வேண்டும். விட்டேத்தியாக இருக்கக் கூடாது. தலையோடு காலாகப் போர்த்திக் கொண்டு தூங்கக் கூடாது.

தவறே நடந்துவிட்டாலும் கோபித்துக் கொள்வதை, கண்டிப்பதை – தேர்வுக்குப் பிறகு வைத்துக் கொள்ள வேண்டும். கன்னாபின்னா என்று திட்டுவது இஷ்டத்துக்கு அடிப்பது போன்றவை பிள்ளைகளது மனப்போக்கையே பாதித்துவிடும். பாடம் மறந்து அடியும் திட்டும்தான் நினைவில் சுழன்று சுழன்று வரும். மதிப்பெண்கள் சரசரவென்று சரியும்.




பிள்ளைகளுக்கு பாடங்கள் புரியாவிடில் பெற்றோர் சொல்லிக் கொடுக்க வேண்டும். உன்னால் நல்லா எழுத முடியும்! என்று நம்பிக்கையூட்டியபடி இருக்க வேண்டும். நீ என்னத்தை எழுதி என்னத்தைக் குப்பை கொட்டப் போறியோ? என்று மறந்தும் காற்றிறக்கும் வேலை வேண்டாம்.




தேர்வு என்பது புனிதப் போர். அந்தப் போருக்கு நம்மில்லத்துப் பிள்ளைகளுக்கு நாம் தளபதியாக இருந்து நடத்திச் செல்ல வேண்டுமே தவிர , நாமே எதிரே அணி வகுத்து நின்றுவிடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 1

01. மிகவும் நெருங்கிய தொடர்பற்ற உருச்சோடிக்குரிய அடைப்பைத் தெரிவு செய்க


1)

2)

3)

02.

1)

2)

3)

♦ தரப்பட்டுள்ள உருக்களைக் கவனத்திற் கொண்டு விடை தருக.



A) B) C) D) E) F)

03. தரையில் தூரப் பயணம் செய்ய உகந்த மூன்று வாகனங்கள் எவை?
1. B,C,D 2. B,C,F 3. B,D,F

04. கடலில் பயணம் செய்ய உகந்த இரு வாகனங்கள் எவை?
1. A,D 2. A,E 3. A,F

05. C,E ஆகியவற்றில் சாத்தியமானதும், ஆனால் B,D ஆகியவற்றில் சாத்தியமல்லாததும் யாது?
1. அதிக பொருட்களைக் கொண்டு செல்லுதல்
2. அதிக சக்கரங்களைக் கொண்டிருத்தல்
3. தரையிலும், கடலிலும் செல்லக் கூடியதாக இருத்தல்

♦ பின்வரும் கவிதையைக் கொண்டு விடை தருக.

அத்தை அடித்தாளோ
அமுதூட்டுங் கையாலே
மாமன் அடித்தானோ
மகிழ்ந்தெடுக்குங் கையாலே
அண்ணன் அடித்தானோ
அணைத்தெடுக்குங் கையாலே

06. இப்பாடலின்படி குழந்தைக்கு அதிக சினத்துடன் அடித்தவர் யார்?
1. அத்தை 2. மாமன் 3. அண்ணன் 4. எவருமில்லை

07. இப்பாடலில் குழந்தையின் தாயின் அண்ணனையும் அவனது மனைவியையும் குறிக்கும் சொற்கள் எவை?
1. அண்ணன், அத்தை 2. மாமன், அத்தை
3. அண்ணன், மாமன் 4. எதுவுமில்லை

♦ A யிற்கும், B யிற்கும் C யிற்கும் பதிலாக இடக்கூடிய மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்க.

08.

| கிழங்கு | பழம் | நதி |
|---|---|---|
| மரவள்ளி | A | களுகங்கை |
| B | அன்னாசி | C |
| கரணை | பப்பாசி | வளவ கங்கை |

1. இராசவள்ளி, தோடம்பழம், மகாவலி கங்கை
2. மாம்பழம், உருளைக்கிழங்கு, ஜின் கங்கை
3. மாணிக்க கங்கை, களனி கங்கை, முந்திரிகை
4. இஞ்சி, தோடை, களனி கங்கை

09.

| | | | |
|---|---|---|---|
| மகாவலி கங்கை | A | களனி கங்கை | B |
| C | களுத்துறை | கொழும்பு | மட்டக்களப்பு |

1. திருகோணமலை, களுகங்கை, கல் ஓயா
2. மல்வத்து ஓயா, நில்வள கங்கை, யாழ்ப்பாணம்
3. களுகங்கை, கல் ஓயா, திருகோணமலை
4. கண்டி, கிருந்தி ஓயா, களுத்துறை

♦ வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.



10. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது, முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
சூடு : முயற்சி எனின், நாடாது : ......................
1. இகழ்ச்சி 2. பூனை 3. அடையார் 4. அடுப்பு

11. வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை, அவன் மண்புழு.
புத்தாண்டில் புகுந்தவன் தங்குவதோ ஓராண்டு, அவன் நாட்காட்டி.
வயலில் :மண்புழு எனின், புத்தாண்டில்: ..................
1. ஓராண்டு 2. நாட்காட்டி 3. ஊதியம் 4. தங்குவது

♦ வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

12.
3 5 7
5 7 9
7 9 ....

1) 3 2) 5 3) 10 4) 11

13.


1)

2)

3)

4)

♦ ஓர் ஆடியில் (தளவாடியில்) விம்பமாகக் காட்சி தருகையில் கீழ்க் காணும் சொற்கள் ஒவ்வொன்றும் தெரியும் சரியான ஒழுங்கு எது?

14. FIRE 1) EI 2) ƎЯIF 3) FIRE

15. POLICE 1) ƎƆI⅃Oꟼ 2) ECILOP 3) POLICE

16. AMBULANCE 1) ECNALUBMA 2) ƎƆИA⅃UᗺMA 3) AMBULANCE

17. ƎMOƆ 1) COME 2) OMCE 3) MOCE

18. OᗺOᗺ 1) BOOB 2) BOBO 3) OBOB

♦ வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19. 3271 1327 7132 ............

1) 2712 2) 2371 3) 2713

20. தை 01, பங்குனி 03, வைகாசி 05, ஆடி 07, புரட்டாதி 09, .................
1. ஐப்பசி 11 2. கார்த்திகை 11 3. மார்கழி 11

♦ சரியான விடையைத் தெரிவு செய்க:


21. 0,6,7,8,9 ஆகியவற்றுக்கு முறையே A,B,C,D,E என்னும்எழுத்துக்கள்பயன்படுத்தப் பட்டுள்ளன. இதற்கேற்ப C E B - A D C = _________ விடையாக அமைவது எது?
1. CBA 2. CAE 3. CEA

♦ ரூபாய் 136க்கு LMN எனவும், ரூபாய் 275க்கு ABC எனவும், ரூபாய் 489க்கு EFG எனவும்,ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளன.

22. இதன்படி ரூபாய் 378 குறிப்பிட்ததகுந்த விடை யாது?
1. MBF 2. FBM 3. LAE




23. இதற்கேற்ப EFG - LMN = ________ விடையாக அமைவது எது?
1. MCE 2. MCM 3. CMC


24. உருவில் உள்ள பெரிய சதுர முகியிலிருந்து சிறிய சதுரமுகி ஒன்றை வெட்டி நீக்கப்பட்டால், பெரிய சதுரமுகியில் தற்பொழுது உள்ள முகங்களின் எண்ணிக்கை யாது?






1) 9 2) 12 3)10

25. சிறுமி ஒருத்தி ஒரு வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு வீட்டுக்கு பின்புறம் இருந்த நிலத்தில் ஓரிடத்திலிருந்து கிழக்கு நோக்கி 6 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து வட கிழக்கு திசை நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து வடமேற்குத் திசை நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து மேற்குத் திசை நோக்கி 6 மீற்றருக்கும் அவ்விடத்திருந்து தான் தொடங்கிய இடத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துத் தரையில் அடையாளமிட்டாள். அவ்வீட்டுத் தோட்டத்தைத் தெரிவு செய்க.

1)

2)

3)


26.


உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு சதுரத்தாளை நான்காக மடித்து துளைகளிடப்பட்டன.அதனை முன்னர் இருந்தவாறு பிரிக்கும் போது அது காணப்படும் விதம் யாது?

1)

2)

3)


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்


♦ சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

27. ஒரு பஸ் வண்டியில் 40 பேர் பிரயாணம் செய்யலாம். 244 பேர் பயணம் செய்ய எத்தனை பஸ் வண்டிகள் தேவை? ......................

28. கமலன் வீட்டுக் கடிகாரம் 12 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது. கமலன் 13 நிமிடங்கள் முந்தி ஓடுவதாக நினைத்து சீர் செய்தான். சீர் செய்த பின் நேரம் முற்பகல் 10.30 ஐக் காட்டியது. உண்மையான நேரம் யாது? ..................

♦ மூன்று புத்தகங்களினதும் இரண்டு கொப்பிகளினதும் விலை ரூபா 230/= ஆகும். அதேபோன்ற இரண்டு புத்தகங்களினதும் ஒரு கொப்பியினதும் விலை ரூபா 140/= ஆகும். இதன்படி,


29. ஒரு புத்தகத்தின் விலை யாது? ............................................
30. ஒரு கொப்பியின் விலை யாது? ............................................

31. 

♦ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

உருவில் இருந்து பெறக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 30 3) 40

32. 

உருவில் இருந்து பெறக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 21 2) 22 3) 23


33. தை மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமையாயின் அம்மாதத்தின் நடுவில் வரும் நாள் என்ன கிழமை ஆகும்?

1. திங்கட்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. புதன்கிழமை

34. 365 நாட்களைக் கொண்ட சாதாரண வருடத்தின் தை முதலாம் திகதி புதன் கிழமையாயின், அவ்வருடத்தின் நடுவில் வரும் நாள் என்ன கிழமை ஆகும்?


1. புதன்கிழமை 2. செவ்வாய்க்கிழமை 3. வியாழக்கிழமை

35. முழு உருவத்தினதும் பரப்பளவு அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?




1) 6 2) 7 3) 8

36. முழு உருவத்தினதும் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?




1) 3 2) 4 3) 6

37. எண்கோலம் அமைவதற்கு வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான எண் யாது?




1) 2 2) 4 3) 6

38. எண்கோலம் அமைவதற்கு வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான எண் யாது?




1) 4 2) 5 3) 6

39. பி.ப. 3.45 ஐக் குறிக்கும் டிஜிற்றல் நேரம் யாது?

1) [15 : 45] 2) [13 : 45] 3) [03 : 45]

40. 01:30 எனும் டிஜிற்றல் நேரம் குறிக்கும் சாதாரண நேரம் யாது?

1) பி.ப. 1.30 2) மு.ப. 1.30 3) நண்பகல் 1.30

## மாதிரி வினாத்தாள் பகுதி 2

பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.

> இலங்கை இயற்கை வளங்கொழிக்கும் செழிப்பான நாடு. இலங்கையில் இயற்கைக் கூறுகள் மலைகளாகவும், காடுகளாகவும், வயல்களாகவும், கடல்களாகவும், ஆறுகளாகவும்,குளங்களாகவும் பிரிந்தும் தொடர்ந்தும் வளம் செய்கின்றன. இலங்கை நாற்புறமும் நீலக்கடலால் சூழப்பட்ட அழகான தீவு. நாற்புறக் கடலும் அலைகளாக எழுந்து இலங்கையை ஆசர்வதிக்கின்றன. மலையகம் பச்சைக் கம்பளத்தால் போர்த்தது போல் தேயிலைச் செடிகளால் செழித்தோங்கிக் காணப்படுகின்றன.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்தது தெரிந்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

01. இலங்கைத் தீவில் காணப்படும் கூறுகள் எவை?

..............................................................................................

02. "செயற்கை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................

03. "வாழ்த்துகின்றன" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................

04. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.

..............................................................................................

05. பெருந்தோட்டப் பயிர் ஒன்று எழுதுக.

..............................................................................................

06. கடலுக்கு கூறும் அடைமொழிகள் இரண்டையும் எழுதுக.

..............................................................................................

07. "காணப்படுகின்றன" என்னும் சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.

..............................................................................................

08. "எமது நாடு இலங்கை" எனும் வாக்கியத்தில் எமது என்ற சொல்லின் திணை, பால், எண், இடத்தை எழுதுக.

..............................................................................................

09. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வந்தேன் | கதிரை | மலைகள் | வந்தோம் | சிறுவர்கள் | சிறுமி |

1) உயர்திணை, பன்மை, படர்க்கைப் பெயர்ச்சொல் (...................................)
2) அஃறிணை, ஒருமை, படர்க்கைப் பெயர்ச்சொல் (...............................)
3) தன்மை, பன்மை, வினைச்சொல் (..................................)

10. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1) மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட நிலம். (..............................)
2) ஆகாய விமானத்தை செலுத்துபவன். (...........................)
3) யானையைப் பழக்கி வழி நடத்துபவன். (...........................)

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) MAY I GO HOME

..............................................................................................

2) YOU WILL COME TOMORROW

..............................................................................................

3) WHAT IS YOUR NAME?



..............................................................................................

12. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

தயவு செய்து அமைதியாக இருங்கள்.

..............................................................................................

13. ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக

1)  2)  3)  4) 

.................. .................. .................. ..................

14. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1) எமது நாடு இலங்கை

..............................................................................................

2) நாம் தமிழ் நன்றாகப் பேசுவோம்.

..............................................................................................

15. பின்வரும் வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) கடேட கீயட்டத வானனே

..............................................................................................

2) ஓயா மட்ட கியல தெனவதா?

..............................................................................................

# ரவிராஜ் படுகொலை வழக்கின் சந்தேக நபர்கள் தலைமறைவு

## சட்டமா அதிபரை உதவுமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நிலையில், நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட மூன்று கடற்படையினர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு உதவுமாறு நீதிமன்றம் நேற்று சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.




நடராஜா ரவிராஜ் கொலை வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்குமாறு கோரி தாக்கல் செய்த மீளாய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மடவல மற்றும் தெஹிதெனிய ஆகியோர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மீளாய்வு மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கடற்படையினர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், அவர்களுக்கு அழைப்பாணையை வழங்க முடியவில்லை எனக் கூறியுள்ளார்.

முன்வைக்கப்பட்ட வாதங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (இ-7)

## கிழக்கில் டெங்கால் 4580 பேர் பாதிப்பு, 18 பேர் உயிரிழப்பு



கிழக்கில் 4580 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே. முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் டெங்கு நோய் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கும் போதே டாக்டர் கே.முருகானந்தம் இவ்வாறு தெரிவித்தார்.

டெங்கினைக் கட்டுப் படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். டெங்கு நோயினைப் பொறுத்தவரையில், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் 2680 நோயாளிகள், மட்டக்களப்பில் 960 நோயாளிகள், கல்முனை சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் 827 நோயாளிகளும், அம்பாறை சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் 113 நோயாளிகளுமாக 4580 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்தார்.

டெங்கு நோய் காரணமாக 18 பேர் கிழக்கு மாகாணத்தில் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 9 பேரும் குறிஞ்சாக்கேணி பிரதேச சபைப்பிரிவுக்குள் 3 பேரும், மூதூர், குச்சவெளி, திருகோணமலை பிரதேசங்களில் தலா ஒன்றுமாக 15 பேர் திருகோணமலை மாவட்டத்தில் உயிரிழந்துள்ளதாகவும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பிரதேசம், காத்தான்குடி, செங்கலடி பிரதேசங்களிலுமாக 3 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1028

Search for people, places and things | Nagendram Home

### மகேஸ்




### கவிஸ்னா





### சர்மி





### ரட்னா




### அனித்தா




### வனிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உத்தேச ஊடக கல்வி நிறுவனம் தொடர்பாக சீனக்குழுவினருடன் கஜந்த பேச்சுவார்த்தை

உத்தேச ஊடக பயிற்சி கல்வி நிறுவனம் தொடர்பாக சீன பிரதிநிதிகளுடன் முதல் சுற்றின் இரண்டாவது பேச்சுவார்த்தை பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கஜந்த கருணாதிலகவுடன் நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தை ஊடக அமைச்சில்நேற்று இடம்பெற்றது. இந்த பேச்சுவார்த்தையில் சீன அச்சீடு மற்றும் மேம்பாட்டு சங்கத்தின் உப தலைவர் கலாநிதி எக்சி எய்வி (Xie Aiwei) உள்ளிட்ட சங்க உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

உத்தேச ஊடகப்பயிற்சி கல்வி நிலையத்தின் மூலம் அச்சு இலத்திரனியல் மற்றும் இணையத்தள ஊடகவியலாளர்களின் பயிற்சிக்கு தேவையான சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படவுள்ளன.



இந்த பேச்சுவார்த்தையின் போது அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரங்க கலான் சூரியவும் கலந்துகொண்டார். (இ-7)

# அமரர் அன்ரன் அல்விஸ் அமைதியான முறையில் பணியாற்றிய கலைஞர்

## பிரதமர் ரணில் இரங்கல்



(கொழும்பு)

காலம் சென்ற திரைப்பட தயாரிப்பாளர் அன்ரன் அல்விஸ் இலங்கை சமூகத்திற்காக அமைதியான முறையில் பணியாற்றிய கலைஞர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமரர் அன்டன் அல்விஸின் மறைவு தொடர்பாக வெளியிட்டுள்ள அனுதாப செய்தியிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கலைஞர்களுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் அன்ரன் அல்விஸ் முன்னோடியாக செயற்பட்டுள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் சுபீட்சத்திற்காக அவர் ஆற்றிய சேவைகளை பிரதமர் நினைவு கூர்ந்தார். (இ-7)

# ரூ.11 கோடி பெறுமதியான மருந்துவகைகள் காலாவதி

(கொழும்பு)

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான களஞ்சியசாலையில் உள்ள, 11 கோடி ரூபாய் பெறுமதியான மருந்து வகைகள், காலாவதி திகதியை அண்மித்துள்ளதாக சுகாதார அமைச்சு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு வகைகளைச் சேர்ந்த மருந்துகள் இவ்வாறு காலாவதியாகியுள்ளதாகவும், அவை காலாவதி திகதியை அண்மித்துள்ளமை தொடர்பில், தொடர்ந்தும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

53 மருந்து வகைகள் மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மற்றும் செப்டெம்பர் மாதங்களில் காலாவதியடையும் என, கணக்கெடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக, இவ்வாறான பல கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் நாசமடைய நேரிட்டுள்ளதாக அந்தத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-7)

# சிறுவர், பெண்களுக்கெதிராக துஷ்பிரயோகம் அதிகரிப்பு

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் முன்பை விடவும் எம்மால் சுதந்திரமாக செயற்பட முடியும். அதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் பூரண சுதந்திரம் வழங்கியுள்ளனர். இதன்பிரகாரம் யுத்தம் நிறைவடைந்த நாட்டில் பிரிவினைவாதத்திற்கு ஒரு போதும் இடமில்லை என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராக துஷ்பிரயோகம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன. எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸாருக்கு பல்வேறு பணிப்புரை விடுக்கவுள்ளேன். ஆகவே சிறுவர் துஷ்பிரயோகம் செய்வோருக்கு கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கை வெளியீட்டு விழா பத்தரமுல்லை வோர்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

# மீள் திருத்தத்துக்கான இறுதித் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

நேற்று வெளியான 2016 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப்பரீட்சை பெறுபேறுகளை மீள்திருத்தத்துக்கான திகதியை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களை ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது. பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபரின் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஊடாகவும் மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்க முடியும். 2016ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சை பெறுபேறுகள், ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கு நேற்றுக் காலை விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகளுக்கான பெறுபேறுகள், தபாலிடப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தனிப்பட்ட விலாசத்துக்கு தபாலிடப்பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## விடத்தல்

Botanical Name: Dichrostacys cinerea
Sinhala Name: Andara
Sans: Bahuvaraka

இது சிறு முட்களை கொண்ட ஒரு பெரும் செடி வகையைச் சேர்ந்தது.

இதன் மரத்தின் பட்டையானது மஞ்சள் நிறமுடையது. இந்த மரத்தில் காணப்படும் சிறிய முட்கள் கூரியதாகக் காணப்படும்.

இதன் கக்கத்தில் சிறு முட்கள் காணப்படும். இது இளமையாக இருக்கும் போது சிறு ரோம அமைப்புக்கள் காணப்படும்.

இதன் இலைகள் சிறிதாகக் காணப்படும். ஒன்று விட்ட ஒழுங்குடையதாகக் காணப்படும்.

இது கூட்டிலைகளாகக் காணப்படும்.

கூட்டிலைகள் கடைசியில் இரண்டாக முடியும். 8-16 கூட்டிலைகள் காணப்படும்.

ஒவ்வொரு இலைகளும் 1.2 -1.5 சென்ரி மீற்றர் நீளமானது.

இலைகளில் காம்பற்றுக் காணப்படும். இலைகளின் நுனி சற்று மழுங்கியதாகக் காணப்படும்.

இதன் பூக்கள் ஊதாவும் இளஞ்சிவப்பு நிறமுடையது. இதன் பூக்களில் 5 அல்லிகளும் 5 புல்லிகளும் 10 மகரந்த மணிகளையும் கொண்டது. இதன் பழங்களும் விதைகளும் அவரை வடிவமானவை.

ஒரு பழத்தினுள் 6-10 விதைகள் காணப்படும். இதன் பூக்கள் டிசெம்பரில் இருந்து மார்ச் வரையும் பூத்துப் பின் ஓகஸ்ட் , செப்டெம்பர் ஆகிய மாதங்களில் காய்க்கும்.

இதன்பட்டையை அவித்து எடுத்த குடிநீரால் கழுவ புண், காயங்கள் நீங்கும். இதன் கொழுந்தைக் கசக்கி கண்ணில் பிழிய கண்நோய் தணியும்.

இதன்பட்டையைபொடித்து 2,3 முறை 2-69 வீதம் எடுக்க குருதிக் கழிச்சல் நீங்கும்.

இதன் பிசினை 2-49



ஒரு நாளைக்கு இரண்டு முறை எடுக்க வெள்ளை நோய் நீங்கும்.

இதன் வேரைப் பொடித்து அல்லது குடிநீராக்கி உண்ண பெண் நோய்களும் சிபிலிசு கொணோறியா நீங்கும்.

இதன் பிசினை வெள்ளை நோய், கரப்பான் முதலியவற்றுக்கு கொடுக்கலாம்.

மாதர்களுக்கு மாதவிடாய் நேரங்களில் ஏற்படும் அதி உயர் இரத்தப் போக்கிற்கும் வயிற்று வலிக்கும். விடத்தல் இலையை சிறுசிறு துண்டாக்கி சிவத்தப் பச்சரிசியுடன் சேர்த்து கல்லுரலில் போட்டு இடித்து அந்த மாவைப் பயன்படுத்தி களிகிண்டியோ பிட்டு அவித்தோ 7 நாட்கள் சாப்பிட்டு வர இவை தீரும்.

எள்ளிலும் சிறிய இலை விடத்தல் என்பது யாவரும் அறிந்ததே. அதேபோல் சிறிய இலைகளாக இருந்தபோது அதியுயர் மருத்துவ குணங்களைக் கொண்டிருப்பதோடு எள்ளில் இருப்பது போல் கல்சியம், இரும்புச் சத்து போன்றவையும் செறிந்து காணப்படுகின்றன.

அத்துடன் கடற்கரையை அண்டி வன்னி மரமும் விடத்தலும் வாழ்கின்றதால் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பது ஒரு பாதகமான விடயம் என்பது குறிப்பிடத்தக்கது.

விடத்தல் இலையை நிழலில் உலர்த்தி உரலில் அல்லது கல்வத்தில் பொடித்து நுண்துகளாக அரித்து எடுத்து 2 கிராம் அளவு காலை - மாலை வெந்நீருடன் 48 நாட்கள் கொடுத்தால் மாதவிடாய் நின்ற பின் ஏற்படும் மூட்டு நோ, உடல் நோ என்பன தீரும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

அத்துடன் மேற்கூறியவாறு நுண் தூளாக்கிய விடத்தல் இலை சூரணத்தை 2 தேக்கரண்டி எடுத்து ஒரு சுண்டு சிவத்தப் பச்சரிசி மாவுடன் சேர்த்து பிட்டு அவித்து சிறு பிள்ளைகளுக்கு கொடுத்தால் எலும்புகள், பற்களின் வளர்ச்சியைத் தூண்டும்.

# University Of Jaffna- Sri Lanka
## Faculty Of Management Studies & Commerce

## Master of Business Administration (MBA) Intake III- 2016-2017

The Faculty of Management Studies & Commerce of the University of Jaffna is pleased to announce the commencement of the Master of Business Administration (MBA) - 2016/2017 and invites applications for the admission from qualified candidates. Details of the courses can be obtained from the Faculty of Management Studies & Commerce or via the internet on the Faculty website: *http://www.maco.jfn.ac.lk/*

**ELIGIBILITY REQUIREMENTS**

A candidate seeking admission to an MBA should possess any one or more of the following qualifications and should demonstrate a satisfactory level of English language proficiency:

i. A degree from a recognized University / Higher Education Institution

OR

ii. A Postgraduate Diploma from a recognized University or Higher Education Institution/ Professional Institution with a minimum of one year post qualifying managerial/ relevant experience.

OR

iii. At least any one of the following professional qualifications with three years managerial/ relevant experience:

- Chartered institute of marketing (CIM) UK
- Associate member of Chartered Institute of Bankers (ACIB) UK
- Associate member of Chartered Institute of Bankers (AIB) Sri Lanka
- Chartered Institute of Management Accountants (CIMA)
- Chartered Institute of Personnel and Development (CIPD)
- Association of Chartered & Certified Accountants (ACCA)
- Chartered Accountants (CA) Sri Lanka
- Certified Management Accountant (CMA) Sri Lanka
- Institute of Engineers (CIE) UK/Sri Lanka
- Institute of Chartered Secretaries and Administrators
- At least a three year Higher National Diploma in Accountancy/ Management/ Marketing obtained from Ceylon Technical College/ Advanced Technical Institute/ Advanced Technological Institute, Sri Lanka, etc.
- Attorney – at – Law

OR

iv. Any other academic/professional qualification(s) obtained from a recognized University/ Institute with a minimum of three years of post qualifying experience acceptable to the board of study and the senate of the University of Jaffna.

**PROGRAMME STRUCTURE**

| | | |
|---|---|---|
| Structure | - | Semester based Course Unit System |
| Semester duration | - | Each semester extends for 20 weeks |
| Duration | - | Two years |
| Medium of instruction | - | English |

**COURSE FEE**

Total course fee would be LKR Three hundred and fifty thousand per student. This can be paid in two installments as given below:

| Detail | Year 1 | Year 2 |
|---|---|---|
| Registration / Renewal | LKR 10,000 | LKR 10,000 |
| Tuition fee | LKR 175,000 | LKR 125,000 |
| Examination fees | LKR 15,000 | LKR 15,000 |
| **Total** | **LKR 200,000** | **LKR 150,000** |

* Application Fees: LKR 2000/=

**CLOSING DATE: 28.04.2017**

**APPLICATION PROCEDURE**

Application form and Paying in voucher can be downloaded from the Faculty website at *http://www.maco.jfn.ac.lk/* or it can be obtained from MBA Office, Faculty of Management Studies & Commerce, University of Jaffna. Duly completed applications should be forwarded to "Coordinator, MBA programme, Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Thirunelveli" by registered post or submit it in person at the MBA Office, Faculty of Management Studies & Commerce on or before the closing date. Indicate "Application for MBA Programme" in the top left hand corner of the envelope.

More relevant information could be obtained through **021 221 6394**.

**Registrar**
**University of Jaffna, Sri Lanka**

(C-7936)

## நீரில் மூழ்கிய மாணவன் பலி

கல்விச் சுற்றுலாவில் ஈடுபட்டிருந்த கந்தகெட்டிய, வெவேதன்ன மகா வித்தியாலய மாணவனான ஆர்.எம். சசிந்த மதுசான் (வயது 13), பதுளை ஓயா ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

பதுளை, ரன்புகுலாவெல நீர் மின்திட்டத்தை பார்வையிடுவதற்காக, வெவேதன்ன மகா வித்தியாலய மாணவர்கள் சிலரும், ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலாவை மேற் கொண்டிருந்தனர். மாணவர்கள், பதுளை ஓயா ஆற்றில் குளிக்கச் சென்ற போதே, மேற்படி மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். நீரில் மூழ்கிய மாணவனை உடனடியாக மீட்டு, கந்தகெட்டிய வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அம் மாணவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் கந்தகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)



## பாராட்டு

### வாழ்த்துகின்றோம்

### திரு.வா.மணிவர்ணன்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய திரு.வா.மணிவர்ணன் அவர்கள் கடந்த 18.03.2017 முதல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் 1989 ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண பதிப்பகத் திணைக்களத்தில் எழுதுவினைஞராக நியமனம் பெற்று வவுனியா, முல்லைத்தீவு, வடமராட்சி வலயக்கல்விப் பணிமனைகளில் கடமையாற்றி 2003ஆம் ஆண்டு முதல் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையில் பொறுப்பதிகாரி மற்றும் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். இவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :**
**கரவெட்டி நண்பர்கள்.**

(ஏ)

**தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம்**

30.03.2017 வியாழக்கிழமை
காலை 8.00 மணியளவில்
சந்நிதி வேலனின்
சங்காபிஷேக நிகழ்வுடன்
கூடிய சண்முக அர்ச்சனையும்
சுவாமி வீதிவலம் எழுந்தருள்
நிகழ்வும் இடம்பெறும்





**அடியார்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

அடியவர்கள் சார்பில்
**ஆ.அருணாசலம்**

(8374)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.ப:சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: B/7136 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:Bio Medical Eng<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7135 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/7141 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 37 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/7137 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7142 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:74செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:GAQ/அரசதொழில்<br>தொ.இ: G/7138 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 59 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BA/ நிரந்தரதொழில்<br>தொ.இ: B/7145 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 26<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7144 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

## இலங்கைக்கு எதிராக

# விரைவில் பொருளாதாரத் தடை

# கூட்டு எதிரணி எச்சரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையினால் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையானது தமது இராஜதந்திர வெற்றியென அரசாங்கம் மார்தட்டிக் கொள்கின்றது.

இருப்பினும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமையானது யுத்தக் குற்ற நீதிமன்றத்தினை உள்நாட்டில் நிறுவ வேண்டும் என்பதற்கான அழுத்தத்துக்காக மட்டுமேயேயாகும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் முன்வைக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத பிரேரணையை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இருவருட கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்டமையானது அரசாங்கத்துக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றி என அரசாங்கத் தரப்பினர் மார் தட்டிக் கொள்கின்றனர்.

இவர்களது மகிழ்ச்சி இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்க போகின்றதென்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஏனெனில் ஐக்கிய நாடுகளினது மனித உரிமைப்பேரவையினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்துக்கு சர்வதேச நாடுகள் ஏகமனதாக ஒத்துழைப்பு வழங்கியதற்கான தேவைப்பாடுகள் குறித்து தற்போது சிந்திக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

தற்போது இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கினாலே குறித்த பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை பாதுகாக்க முடியும் என அண்மையில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்திருந்தார்.

ஆனால் உண்மையில் எமது நாடு எவ்வாறானதொரு பொருளாதார வீழ்ச்சியை எதிர் கொள்ளப் போகின்றதென்பதையும் இவ்வாறான பொருளாதார வீழ்ச்சியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் வழங்கப்பட்ட இருவருட கால அவகாசம் எத்த



கையதொரு தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றதென்பதையும் ஆளுந்தரப்பினருக்கு விளங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கை பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றித்தினூடாகவும் அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் மூலமாகவும் கிடைக்கப்பெறும் உதவிகளை கொண்டு நாட்டினது பொருளாதாரத்துறையை கட்டியெழுப்ப முடியும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கின்றது.

யுத்தக்குற்ற விசாரணை நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கும் புதிய அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் காலதாமதத்தின் காரணமாக எழுந்த மக்களது எதிர்ப்பினை சர்வதேச நாடுகள் அவதானித்து வந்தன.

இதனூடாக தொடர்ந்தும் குறித்த யுத்தக்குற்ற விசாரணை நீதி மன்றத்தை வலியுறுத்தி மக்கள் பலத்தினை அதிகரிக்கும் வகையில் இலங்கை மீது சர்வதேச பொருளாதார தடையை விதிப்பதன் ஊடாக இலங்கையை பட்டினிநாடாக மாற்றுதற்கான செயற் பாடாகவே இதனைக் கருத முடியும்.

குறித்த பொருளாதாரத் தடையை ஈடு செய்து உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்டு மக்களது பட்டினியை போக்குவதற்கு அரசாங்கம் சர்வதேச கெடுபிடிகளுக்கு உடன்பட்டே ஆகவேண்டும். இதனூடாக யுத்தக்குற்ற விசாரணை நீதிமன்றத்தையும் சமஷ்டி யாப்பினையும் அரசாங்கம் ஏற்படுத்தியே ஆகவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படும்.

கடந்த 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தோனேசியா நாட்டிலிருந்து கிழக்கு திமோர் பிரிந்து தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்திருந்த நிலையில் சர்வதேச நாடுகள் அதற்கு ஆதரவு தெரிவித்தன.

எனினும் அப்போது பதவியிலிருந்த இந்தோனேசியாவின் ஜனாதிபதி தான் பதவியிலிருக்கும் வரை கிழக்கு திமோரினது தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதற்கு ஒரு போதும் அனுமதியளிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

அதன் பின்னர் இந்தோனேசியா மீதான பொருளாதாரத் தடையை சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுத்தின. இதனால் ஏற்பட்ட பாரிய வறுமையினால் மக்கள் பட்டினியை எதிர் கொள்ள நேரிட்டது. அதுவரையில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்த மக்கள் கூட அரசாங்கத்து எதிராக போர்க்கொடியை உயர்த்தினார்கள்.

இதனால் அப்போது அந்நாட்டில் அரசியல் புரட்சி ஏற்பட்டு பதவியிலிருந்த ஜனாதிபதி பதவியிழப்பதற்கும் வழிவகுத்தது. பின் ஆட்சிக்கு வந்த புதிய ஜனாதிபதியினால் இந்தோனேசியாவிலிருந்து கிழக்கு திமோருக்கு விடுதலை அளிக்கப்பட்டதுடன் சர்வதேச நாடுகளினது கோரிக்கைகளுக்கு உடன்பட வேண்டியேற்பட்டது. இவ்வாறு உடன்பட்டதன் காரணமாகவே அதுவரை நீடித்த பொருளாதார தடையை இந்தோனேசியா நாட்டுக்கு தளர்த்திக்கொள்ள முடிந்தது.

இதேபோன்றதொரு நிலையை இலங்கையில் ஏற்படுத்துவதற்காகவே சர்வதேச நாடுகள் தமது திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றன. எமது நாட்டின் மீது விதிக்கப்படும் பொருளாதார தடையால் மக்கள் பட்டினியை எதிர்கொள்ள நேரிடும். அவ்வாறான சூழலில் மக்கள் கூட்டாக இராணுவத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பி மக்களது பட்டினியைப் போக்க வேண்டும் என வலியுறுத்துவார்கள். அவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்துவதற்காகவே தற்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் வழங்கப்பட்ட இருவருட கால அவகாசத்தினை சகல நாடுகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆகவே இதனூடாக அரசாங்கம் யுத்தக்குற்ற விசாரணை நீதிமன்றத்தையும் சமஷ்டி யாப்பினையும் நிறுவுவதற்கு எவ்வாறெனினும் உடன்பட்டே ஆக வேண்டிய நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாடு மயானம் செல்லும் நிலை உருவாகலாம்

## மகிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வரும் நிகழ்ச்சி நிரலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றால் நாட்டை மயானத்திற்கு கொண்டு செல்லும் நிலை உருவாகலாம். எனவே நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவகாசம் கோரியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீண்ட நாட்களாக பிணை வழங்கப்படாமல் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவர் நியாயமான காரணங்களை முன் வைத்து பிணை கோரியபோதும் அது மறுக்கப்பட்டுள்ளது. அதனால் தான் அவர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

விமல் வீரவன்சவின் கைதைத் தொடர்ந்து அவர் பக்கம் ஏராளமான மக்கள் திரண்டுள்ளனர். அதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கமே ஏற்படுத்திக்கெடுத்துள்ளது. அத்துடன் அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுபவர்களைத் பழிவாங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இருந்த போதிலும் அவ்வாறான செயற்பாடுகள் மூலம் எம்மை அடக்கிவிட முடியாது. ஏனெனில் மக்கள் பலம் எமக்குள்ளது.

மேலும் விமல் வீரவன்ச மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டையொத்த குற்றச்சாட்டுள்ளவர்கள் அரசாங்கத்தின் பக்கமும் உள்ளனர். எனினும் அவர்கள் சுதந்திரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதனூடாக அரசாங்கம் சட்டத்தை பாகுபாடாக நடைமுறைப்படுத்த முனைவதை அவதானிக்க முடிகிறது.

மேலும் அரசாங்கத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் "விமல் வீரவன்சவின் உடல் நிலை பாதிக்கப்பட்டால் அவரை மயானத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றனர். இருந்த போதிலும் அரசாங்கம் இவ்வாறாக தனது நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றால் விமல் வீரவன்சவை மாத்திரமல்ல. முழு நாட்டையும் மயானத்திற்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை உருவாகும். ஆகவே இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்தும் பொறுத்துக் கெண்டிருக்க முடியாது.

அரசாங்கம் அண்மைக்காலமாக முன்னெடுத்துச்செல்லும் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவகாசம் கோரியுள்ளோம். அதற்கான அவகாசம் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 90 | 100 | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 120 | 120 | 100 |
| தக்காளி | 120 | 120 | 90 | 100 | 120 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 70 | 100 | 80 | 80 | 80 |
| கோவா | 50 | 100 | 40 | 50 | 60 | 60 | 60 |
| கரட் | 100 | 140 | 60 | 80 | 60 | 160 | 80 |
| பூசணி | 50 | 80 | 60 | 60 | 80 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 50 | 80 | 80 | 200 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 80 | 100 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 80 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 300 | 180 | 180 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 80 | 100 | 80 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | - | 60 | 80 | 100 | 100 |
| பயற்றங்காய் | 180 | 140 | 100 | 100 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 140 | 80 | 80 | 100 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 60 | 60 | 100 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 120 | 150 | 160 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 300 | 300 | 400 | 300 |
| போஞ்சி | 200 | 200 | - | 160 | 150 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 80 | 60 | 60 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 80 | 80 | 40 | 80 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 20-70 | 70 | 60 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 120 | - | 80 | 200 | - |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 100 | 60 | - | 80 | 50 | 80 | - |

# சிறைச்சாலை பேருந்து மீது தாக்குதல் விசாரணை அறிக்கை தயாராகிறது

(கொழும்பு)

களுத்துறை பிரதேசத்தில் சிறைச்சாலை பேருந்து மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட உள்ளதாக அந்தக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

கடந்த பெப்ரவரி மாதம் 27ம் திகதி காலை இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் பிரபல பாதாள உலக குழுவின் தலைவர் சமயங் உள்ளிட்ட 7 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்காக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ரூமி மர்சூக் தலைமையில் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவினால் இதுவரை சுமார் 20 நபர்களிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் படி அதன் அறிக்கையை தயாரித்து அடுத்த மாதத்திற்குள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

யாழ்ப்பாண பொதுநூலகம்



# அமைச்சரவை அங்கீகாரம் குறித்து தெளிவுபடுத்துங்கள்

## அமைச்சரவை செயலாளருக்கு அமைச்சர் அர்ஜுன கடிதம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு கொடுப்பது சம்பந்தமாக கிடைக்கப்பெற்றுள்ள அமைச்சரவை அங்காரம தொடர்பில், முழுமையான அறிக்கையை தனக்கு சமர்ப்பிக்குமாறு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்கவுக்கு அனுபபியுள்ள கடிதத்திலேயே அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம்கூடிய அமைச்சரவையில், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கலந்து கொள்ளாத நிலையில், துணை அமைச்சராக, பிரதி அமைச்சர் முத்துஹெட்டிகம கலந்து கொண்டிருந்தார். இந்நிலையிலேயே, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு கொடுப்பது சம்பந்தமாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீன தனியார் நிறுவனத்துக்கு கொடுப்பது தொடர்பில் சிக்கல் ஏற்படும் நிலைமை குறித்து பிரதி அமைச்சர் கடிதமொன்றை சமர்ப்பித்தும், இது தொடர்பில் இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், ஜனாதிபதியா இவ்வாறு ஆலோசனை வழங்கினார் என அமைச்சர் அக்கடிதத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். எனவே, அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு கொடுப்பது குறித்து அமைச்சரவை அங்கீகாரம எவ்வாறு வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து, முழுமையான விளக்கத்தை தனக்கு வழங்க வேண்டும்" எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# கடந்த வாரம் 7 பேரைக் காணவில்லை

(கொழும்பு)

ஒரு குழந்தை, 9 வயதுடைய பிள்ளை மற்றும் இளைஞனொருவன் உட்பட 7 பேர், கடந்த வாரம் காணாமல் போயுள்ளமை தொடர்பில் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இலங்கையில் பல்வேறு பகுதிகளிலிருந்து கடந்த 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில், இவர்கள் காணாமல் போயுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தலப் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட காஞ்சனா மஹனாமா (வயது 29) மற்றும் அவரது ஒன்றரை வயதுடைய மகன் ஆகியோர் கடந்த 24ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளனரென, பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், குட்டிகல பிரதேசத்திலிருந்து ஒன்பது வயதுடைய நிம்சரா சந்தீப என்ற பிள்ளையை, கடந்த 25ஆம் திகதியிலிருந்தும் ஹக்மன பிரதேசத்திலிருந்து மதுகே சம்பத் என்ற இளைஞனை, கடந்த 24ஆம் திகதியிலிருந்து காண்வில்லையென, முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து றுஷானா மெஜினியா (வயது 43) என்பவர் கடந்த 25ஆம் திகதி காணாமல் போன அதே வேளை, நாரஹேன் பிட்டியிலிருந்து என். சங்கர் (வயது 36) என்பவரும் காணாமல் போயுள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஹிக்கடுவ ஹோட்டல் ஒன்றின் முகாமையாளரும், கடந்த 26ஆம் திகதியிலிருந்து காணாமல் போயுள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தந்தை செல்வா ஞாபகார்த்த தினப் போட்டி

வடமாகாணத்தில் இயங்குகின்ற 1 AB பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

பேச்சுக்கள் - கட்டுரைகள் தந்தை சா. ஜே. வே செல்வநாயகம் தொடர்பாக பின்வரும் தலைப்புகளுள் ஒன்றாக இருத்தல் அவசியம் 1.வரலாறு2. ஆளுமை 3. சமூகப்பார்வை 4. ஒழுக்கவியல்

போட்டியில் ஒரு பாடசாலையில் இருந்து பேச்சுப் போட்டிக்கு இருவரும் கட்டுரைப் போட்டிக்கு இருவரும் பங்கு பெற்றலாம்.

பேச்சுத் தலைப்பானது ஏற்கனவே வழங்கப்பட்ட நான்கு தலைப்பில் விரும்பிய தலைப்பு ஒன்றினை தெரிவு செய்து குறிப்பிட்ட தலைப்பில் 7 நிமிடங்கள் பேசுதல்

கட்டுரைத் தலைப்பானது போட்டி நடைபெறும் இடத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட தலைப்பில் ஒன்றினைத் தெரிந்து அதில் 250-300 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுதல்

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

செல்வநாயகம் நினைவு அறக் கட்டளை, தந்தை செல்வா இல்லம்,தந்தை செல்வா வீதி, தெல்லிப்பழை. மேற்படி போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2017.

**போட்டி**

யா/மத்திய கல்லூரியில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை9 மணிக்கு நடைபெறும்.

**குறிப்பு**

போட்டிக்கு விண்ணப்பித்த பின்னர் போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவர் எண்ணிக்கை பாடசாலையின் பெயர் என்பவற்றை குறுந்தகவல் (SMS) மூலம் மேலே குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துக்கு 31.03. 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

இப் போட்டிகளுக்கு உதவும் வகையில் தந்தை செல்வா தொடர்பான வழிகாட்டி கையேடு ஒன்று வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக 1 AB பாடசாலைகள் அனைத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே கையேடு கிடைக்கப் பெறாத 1 AB பாடசாலைகள் தங்களுடைய வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (இ)

> தன் சிந்தனையைப் பற்றி இறுதிவரையில் சொல்ல அஞ்சாதவன்தான் உண்மையில் சுதந்திரமான மனிதன்.
> – ஓர் அறிஞர்

**வலம்புரி**
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தமிழ் மக்கள்

தமிழ் மக்களை எப்படியும் ஏமாற்றலாம் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் சிலர் நினைக்கின்றனர்.

தாங்கள் எது கூறினாலும் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்ற நிலைப்பாட்டில், இருக்கின்ற அரசியல்வாதிகள் இன்னமும் தமிழ் மக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

தமிழ் மக்கள் எவரையும் உடனடியாக ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள். ஏற்றுக் கொண்டவர்களை சடுதியாகத் தூக்கி எறியவும் மாட்டார்கள்.

அதேநேரம் ஏற்றுக்கொண்டவர்கள் ஏறுமாறாக நடந்தால், அவர்களைத் தூக்கி எறியவும் தயங்க மாட்டார்கள் என்பதே உண்மை.

இந்த உண்மையை தமிழ் அரசியல்வாதிகள் சிலர் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர். இது வேதனைக்குரியது. இதற்கு தமிழ் மக்கள் தொடர்ந்தும் எங்களையே ஆதரிப்பர் என்றே நினைப்பே காரணமாகும்.

ஒன்றை ஏற்றுக் கொண்டால் அதனோடு சீவியம் நடத்துவதே நம் தலைவிதி என்றிருக்கும் நிலைமை நம்மிடம் உண்டென்பது ஏற்புடையதாயினும் இது சரிவராது என்று நினைத்து விட்டால், பின்னர் மறுபரிசீலனை என்ற பேச்சுக்கே தமிழ்மக்களிடம் இடமில்லை என்றாகி விடும். இந்த உண்மைகளைத் தமிழ் அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தான் நினைப்பதே சரி என்றவாறு நடந்து கொள்கிறது.

அதிலும் குறிப்பாக இலங்கை அரசுக்கு கால அவகாசம் வழங்குகின்ற நடவடிக்கையில் தமிழ் மக்களின் கருத்துக்களை அறியாமல்; தமிழ் மக்களின் நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்ளாமல், அனைத்தும் யாமறிவோம் என்ற கர்வத்தில் கால அவகாச விவகாரம் கையாளப்பட்டுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் மிகுந்த ஆத்திரமடைந்துள்ளனர். இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டதால் அடிவயிறு பற்றி எரியுது என்றிருக்கக்கூடிய தமிழ் மக்களுக்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் தெரிவித்த கருத்துக்கள் எரிகின்ற நெருப்பில் பெற்றோல் ஊற்றியதாகி விட்டது.

மூன்றாந்தரப்பால் எதுவும் நடக்காது; இலங்கை அரசுடன் பேசியே பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கூறியது அக்கட்சியின் நிலைப்பாடாகவே கருதப்படக் கூடியது.

ஆக, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த நினைத்த அக்கட்சித் தலைமை அதனை துரைராஜசிங்கம் மூலமாக வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு வருட கால அவகாசத்தின் பின்னர் சர்வதேச நீதிபதிகளுக்கு இங்கு இடமில்லை என்று இலங்கை அரசு கூறும்.

அப்போது தமிழ் மக்கள் இன்றைய கூட்டமைப்பின் தலைமையை ஒருமாதிரியாகப் பார்ப்பர்.

அத்தகைய நிலைமை ஏற்படும்போது, நாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே சொல்லியிருக்கிறோம். மூன்றாந்தரப்பால் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது என்று எனப் பதிலளிப்பர்.

இதன் பொருட்டே தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், எந்த வகையிலும் ஏற்க முடியாத கருத்தை முன்வைத்தார் எனலாம்.

எது எவ்வாறாயினும் இன்றைய கூட்டமைப்பின் அதிகாரப்போக்கெல்லாம் இன்னொரு பலமான அரசியல் கட்சி இல்லாத வரைக்கும் என்பதை ஞாபகத்தில் கொள்வது நல்லது.

ஆம், தமிழ் மக்கள் அகழ்வாரைத் தாங்கும் நிலம்போன்றவர்கள். அதேவேளை பொறுமை இழந்தால் பூமி பிளப்பது போல தமிழ் மக்களும் தம் விரோதிகளைத் தூக்கி எறிவர்.

அதற்கான காலம் நெருங்குகிறது என்பதை மட்டுமே இப்போதைக்குச் சொல்ல முடியும்.

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## சூரியன் எழும் முன் நீ எழு



✦ நான் பெரிய பணக்காரன் என்று ஒரு போதும் பெருமை பேசாதே. நட்சத்திரங்களின் பிரகாசத்தின் முன், மின்மினிப்பூச்சியின் கர்வம் காணாமல் போய் விடும். இயற்கையின் பேராற்றலின் முன், நம்முடைய செல்வமும் செல்வாக்கும் மிக அற்பமானவை.

✦ நீ இறைவனைத் தேட் விரும்பினால், முதலில் மனிதனைத் தேடு. தெய்வீகசக்தி மற்ற எல்லா பொருளைக் காட்டிலும் மனிதனிடமே விசேஷமாக இருக்கிறது.

✦ சூரிய உதயத்திற்கு முன் எழுந்து, அன்றாடப் பணிகளைத் தொடங்குபவன் வாழ்வில் வெற்றி பெறுவது போல, சிறுவயதில் இருந்தே ஆன்மீக நாட்டத்தை வளர்த்துக் கொள்பவன் இறைவனை அடைவது உறுதி.

✦ உலக ஆசைகளின் நடுவில் இருந்து கொண்டே மனதைக் கட்டுப்படுத்த பழகியவனே உண்மையில் வீரன்.

✦ மனத்தூய்மை பெற்றவனின் வாய் வார்த்தைகள் மந்திரம் போல காந்தசக்தி பெற்றுவிடும்.

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**மாலை வேளையில் விளக்கேற்றுவது ஏன்?**

சுத்தமான தீபாலங்காரமுள்ள இடத்திற்கு மட்டுமே லட்சுமிதேவி வருகை தருவாள். ஆனால் சுத்தமில்லாத இடத்தில் மூத்தவள் பகவதி வசிக் கிறாள். மாலைப் பொழுதிற்கு முன்பே அவள் தனது தங்குமிடத்தைத் தேடிப்போவாள்.மாலைப்பொழுதிலும் அந்த இடம் சுத்தமில்லாமல் இருந்தால் அவள் அங்கேயே தங்கி விடுவாள். எனவே லட்சுமி தேவி அங்கு வரமாட்டாள். அடித்துப்பெருக்கி சாணம் தெளித்து விளக்கலங்காரம் செய்வதைக் கண்டால் லட்சுமிதேவி அங்கு பிரவேசிப்பாள். அந்த வீட்டிற்கு லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.




எனவே தான் மாலை வேளையில் விளக்கேற்றப்படுகிறது.

(தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** சோலை, ஜெயபுரம், நாகபடுவான், சின்னப்பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** சாந்த சோலை கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## FA கிண்ண உதைபந்தாட்டம்

# சென். நீக்கிலஸ் பாடும்மீன்கள் அடுத்த சுற்றுக்கு தகுதியானது



தேசிய ரீதியிலான Fa-கிண்ண உதைபந்தாட்டத்தில் முக்கியம் வாய்ந்த இரண்டு போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கு மைதானத்தில் 26.03.2017 அன்று இடம்பெற்றது. இதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் வி.க எதிர்த்து வென்னப்புவ அல்இரா வி.க .மற்றும்பாடும்மீன்கள் விக.எதிர் நீர்கொழும்பு யுபிற்றர்ஸ் வி .கழகம் மோதியது. முதல் போட்டியில் வென்னப்புவ அல்இரா வி.கழகத்தை எதிர்த்தாடிய சென். நீக்கிலஸ்விக 04:00என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. இரண்டாவது போட்டியில் மோதிய நீர்கொழும்பு யுபிற்றர்ஸ் விகழத்தைஎதிர்த்துக் கொண்ட குருநகர்பாடும்மீன்கள் வி.க 03:00என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குள் தகுதியானது. (க)

# சுதேசிய திருநாட் கொண்டாட்ட மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்டம்

## யாழ். Win Star சம்பியன்



அரியாலை 98 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் நடைபெற்ற மாவட்ட ரீதியான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது யாழ். Win star விளையாட்டுக்கழகம். (க)

# காலிறுதிக்குள் ஞானமுருகன்



யாழ்ப்பாணம்,வலிகாமம்,பருத்தித்துறை, வடமராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் "புதிய விடியல்-2017" உதைபந்தாட்ட தொடரில் 26.3.2017 அன்று நடைபெற்ற போட்டியில்.வதிரி பொம்மர்ஸ் அணியுடன் ஞானமுருகன் அணி மோதியது. நடைபெற்றபோட்டியில் 2-1 என்ற கோல்கணக்கில் ஞான முருகன் அணி வெற்றி பெற்றது.

ஞானமுருகன் அணி சார்பில் தசதன்(ராசா) இரு கோலினையும் போட்டார்.

காலிறுதிப்போட்டியில் வதிரி டயமன்ஸ் அணியுடன் 02.04.2017 அன்று துரையப்பா விளையாட்டரங்கில் மோதவுள்ளது ஞானமுருகன்அணி (க)

# புதுவருட தினத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்ட பொலிஸாரால் புதுவருடதினத்தை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுவருட தினத்தை முன்னிட்டு வருடாந்தம் பொலிஸாரால் நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி யாழ்.மாநகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட 9 பிரதான பொலிஸ் நிலைய பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் பங்குபற்ற முடியும். இவ் விளையாட்டு நிகழ்வில் கிரிக்கெட், கயிறிழுத்தல், சைக்கிள் ஓட்டம், மரதன்ஓட்டம், கிறிஸ்மரம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளன.

இவற்றில் பங்குபெற விரும்புபவர்கள் கிராம சேவையாளர்களினுடாக பொலிஸாருடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் இப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும் எனவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

# வல்வை விளையாட்டுக் கழகத்தின் ஆண்களுக்கான மரதன் ஓட்டம்





வல்வை விளையாட்டுக் கழகத்தின் 57 ஆம் ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் தற்பொழுது இடம்பெற்று வருகி ன்றன.

இதன் வரிசையில் அண்மையில் ஆண் மற்றும் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் வல்வெட்டித்துறைச் சந்தியில் ஆரம்பித்து தொண்டைமானாறு சந்தியூடாக உடுப்பிட்டி சந்தி அப்பா பாடசாலை சந்தி வழியாக பொலிகண்டி சந்தி பின்னர் மீண்டும் வல்வெட்டித்துறை சந்தியை வந்தடைந்தது.

மரதன் ஓட்டப் போட்டியில் 28 ஆண்கள் பங்குபற்றி 26 ஆண்கள் ஓட்டத்தினை நிறைவு செய்திருந்தார்கள்.

1 ஆம் இடம் த.பிரதீப் (நேதாஜி விளையாட்டுக் கழகம்), 2 ஆம் இடம் பி.பிரதீன் (ரேவடி விளையாட் டுக்கழகம்),3ஆம் இடம் கே.கிரிசாந்தன் (இளங்கதிர் விளையாட்டுக்கழகம்). (க)

# அல்வாய் விளையாட்டு விழா கரப்பந்து வெற்றிக்கிண்ணம் வெள்ளிருவை வசம்



பிரித்தானியா,சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் அல்வாய் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான மின்னொளியிலான கரப்பந்து தொடரின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பெரியார் பகுதி அறிவருள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இவ் இறுதிப் போட்டியில் அல்வாய் பாரதி அணியை எதிர்த்து அல்வாய் கிழக்கு வெள்ளிருவை அணி மோதியது.

இறுதிவரை பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 12-9 என்ற செற்கணக்கில் அல்வாய் பாரதி அணியை வீழ்த்தி அல்வாய் கிழக்கு வெள்ளிருவை அணி 2017 ஆம் ஆண்டுக்கான அல்வாய் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது (க)

யாழ்ப்பாண பொதுநூலகம்



## துன்னாலையில்...

கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு அப்பகுதியில் உள்ள இரு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் கோஷ்டி மோதலாக மாறியுள்ளது.

இதில் வாள்வெட்டிற்கு இலக்கான மூவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை செய்து வந்த நெல்லியடிப் பொலிஸார், அதே இடத்தைச் சேர்ந்த இருவரை சந்தேகத்தின் பேரில் நேற்று கைது செய்தனர். அவர்களை இன்று நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## 27 பவுண் தங்...

காலை எழுந்து சுவாமி அறைக்குள் சென்ற போதே மேற்படி திருட்டு இடம்பெற்றது தெரியவந்துள்ளது.

சுவாமி அறையின் பின்பக்க யன்னலின் கம்பியை வளைத்து உள்நுழைந்தே அறையில் இருந்த சுமார் 14 லட்சம் பெறுமதியான 27 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றபோது வீட்டிலிருந்தவர்கள் ஏனைய அறைகளில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர்.

இக் கொள்ளை சம்பவம் தொடர்பாக தடயவியல் பிரிவு பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் நேற்று மாலை விசாரணைகளை மேற்கொண்டனர். (செ-89)

## 110 மாணவர்கள்...

க்கது.

இதேவேளை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 36 மாணவர்கள் 9ஏ உம் 33 மாணவர்கள் 8ஏ உம் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரியில் 19 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றதுடன் யாழ்ப்பாணம், சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் 12 மாணவர்கள் 9ஏ, சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 10 மாணவர்கள் 9ஏ சித்தியும், பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி 9 மாணவர்கள் 9ஏ சித்தியும் பெற்றுள்ளனர்.

இதேவேளை கடந்த வருடம் யாழ்.வலயத்தில் 59 மாணவர்களே 9ஏ சித்தி பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-ந)

## அனலைதீவு சதாசிவம்...

இப் பரீட்சையில் 18 மாணவர்கள் கணித பாடத்தில் ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதேவேளை 23 மாணவர்களும் கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளதுடன் 19 மாணவர்கள் க.பொ.த உயர்தரத்துக்கு தகைமை பெற்றுள்ளனர்.

இம் மாணவர்களுக்கு கணித பாடத்தை கற்பித்த ஆசிரியர் துரைராஜா புஸ்பகாந்தன் மற்றும் ஏனைய பாட ஆசிரியர்களையும் பாடசாலை அதிபர் நா.ராதாகிருஷ்ணன் பாராட்டியுள்ளார். (ந-9)

## சர்வதேச விசாரணை...

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர, உண்மை யைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமை ப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

“எங்களால் முடியும். அதனை செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதற்கமைய நடவடிக்கைகளை எடுப்போம். நடுத்தர தமிழ் மக்கள் ஒருபோதும் சர்வதேச விசாரணைகளைக் கோருவதில்லை என்பது எனக்குத் தெரியும். வடக்கிலுள்ள சில இனவாதப் பிரிவினரே இன்றும் சர்வதேசத்தின் தலையீட்டைக் கோரிவருகின்றனர். எனினும் சர்வதேச தலையீட்டிற்கு இடமளிக்காமல் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து விசேடமாக அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கும் நாங்கள் நீதியைப் பெற்றுக் கொடுப்போம். உண்மையைக் கண்டறியும் பொறிமுறை தொடர்பில் பிரதமர் தலைமையில் கவனம் செலுத்தி வருகின்றோம். எதிர்வரும் சில மாதங்களில் இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைக்கவிருக்கின்றோம். அத்துடன் உள்ளகப் பொறிமுறை தொடர்பான செயற்பாடுகள் குறித்தும், எதிர்வரும் இரண்டு வருடங்களில் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பிலும் ஜனாதிபதி தலைமையில் கலந்தாலோசிக்கவுள்ளோம். இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே நாம் அறிவோம். அது தொடர்பில் ஆராய்ந்து, அவை யுத்தக்குற்றங்களா என நாம் தீர்மானிப்போம். இலங்கை இராணுவம் உலகிலுள்ள ஒழுக்கமான இராணுவம் என்பது எனது தனிப்பட்ட கருத்து. எனினும், ஏனைய இராணுவங்களைப் போன்று எமது இராணுவத்திலும் தவறிழைப்பவர்கள் உள்ளனர். விசாரணைகளின் ஊடாக தவறிழைத்தவர்கள் உள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டால், அது தொடர்பில் நாம் நடவடிக்கை எடுப்போம். அதன் ஊடாக எமது இராணுவத்தின் கௌரவத்தை நாம் பாதுகாப்போம். நீதிமன்றத்தின் ஊடாக யுத்தக்குற்றமா இல்லையா என தீர்மானிக்கப்படும் என்றார்.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கம் அமெரிக்கா உட்பட அதன் நேச நாடுகளுடன் இணைந்து கால அவகாசத்திற்கான தீர்மானமொன்றை நிறைவேற்றியதன் ஊடாக நல்லாட்சி அரசாங்கம் நாட்டை சர்வதேசத்தின் பொறிக்குள் சிக்கவைத்துள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் குற்றம் சுமத்திவருகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ தரப்பினரை கடுமையாக விமர்சித்ததுடன் அவர்களை கோமாளிகள் என்றும் சாடினார்.

இன்று எங்கள் மீது முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் பொய்யான குற்றச்சாட்டுக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும்போது அவற்றுக்கு பதிலளிப்பதற்கு நாங்களும் தயார் என்பதை மோசடிகாரர்களான ஒன்றிணைந்த எதிர்கட்சியிலுள்ள உறுப்பினர்கள் அறிந்திருக்க வேண்டும். நீங்கள் ஒரு கல்லை எறிந்தால் அதற்குப் பதிலாக 100 கற்களை எறிவதற்கு எங்களால் முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். சிறந்த ஆட்சியை நிறைவு செய்து தோற்றுப்போயிருந்தால் பரவாயில்லை. ஆனால் இவ்வளவு கீழ்த்தரமான மோசடி, ஊழல்களை செய்த அரசாங்கமொன்று இந்த நாட்டில் மட்டுமல்ல, எந்தவொரு பிராந்தியத்திலும் இருந்திருக்கவில்லை. இவர்கள் சர்வதேச கோமாளிகள். இவர்கள் செய்யும் செயற்பாடுகளால் எமது நாட்டின் மீது காணப்படுகின்ற நற் பெயருக்கு சர்வதேச மட்டத்தில் பங்கம் ஏற்படுகிறது. இவர்கள் ஜெனிவாவுக்குச் சென்று பொய்யுரைக்கின்றார்கள். விசேடமாக வரவேற்பு மண்டபத்திலிருந்து உரைநிகழ்த்திவிட்டு அதனை பெரிய உரையென நினைக்கின்றனர். போர்க்குற்ற நீதிமன்றம் எங்கே இருக்கின்றது? தன்னை மின்சாரக் கதிரையில் அமர்த்த முயற்சிப்பதாக தாம் பதவியிலிருந்த காலத்தில் மகிந்த ராஜபக்ஷ கூச்சலிட்டுவந்தார். இன்று சர்வதேசத்தில் மின்சாரக் கதிரை இல்லை என்பது எமக்குத் தெரியும். எனினும் இருந்த இடத்திலிருந்து அவரை நாங்களே காப்பாற்றினோம். எமது யோசனையில் இந்த நாட்டை காப்பாற்றியிருந்திருக்காவிட்டால், மகிந்த ராஜபக்ஷ இன்னும் பதவியில் இருந்திருந்தால் இன்று சர்வதேச விசாரணை இடம்பெற்று, அதனூடாக இந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு சிலவேளை மகிந்த ராஜபக்ஷ உட்பட இந்த நாட்டுத் தலைவர்களுக்கு வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாத பயணத் தடைக்கூட விதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அன்று மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரால் செய்துமுடிக்க முடியாமல்போன சவால்களை இன்று நல்லாட்சி அரசாங்கம் தலைமையில் ஜெனிவாவில் 48 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றியிருக்கின்றோம். இது சர்வதேச அரங்கில் இலங்கை செய்துமுடித்துள்ள மாபெரும் சாதனை என்றார். (செ-11)

## தீர்மானங்களால்...

கோரவுள்ளதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்,

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள இரண்டு வருடத்தில் என்ன முன்னேற்றம் என்பது தொடர்பில் ஐ.நா கண்காணிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், ஆகிய மாவட்டங்களை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடைய பிரநிதிகளுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர், உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையில் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியிலிருந்து 3 மணிவரை சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள அனைத்து மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் பிரதிநிதிகளை சந்தித்திருந்தோம். இவர்களில் பலர் ஆணைக்குழுக்கள் பலவற்றின் முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்கள். ஆனால் இன்னமும் ஒன்றும நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெறாதவற்றை எம்மால் நடத்த முடியுமோ என்பது கேள்விக்குறிதான்.

எனினும் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. 19 ஆயிரம் பேர்வரையில் அதில் சாட்சியமளித்திருந்தனர்.

எனவே அதனை வெளியிட்டால் மக்கள் கூறியவை அதில் சரியாக பதியப்பட்டுள்ளதாக என்று பார்க்க முடியும். அடுத்து அந்த அறிக்கையை வாசிப்பவர்கள் இத்தகைய விடயங்கள் தான் நடைபெற்றன என்பதனையும் அறிய முடியும்.

இந்த அறிக்கையின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆகவே அந்த அறிக்கையை உடன் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க உள்ளேன். மேலும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகள் பொலிஸாரின் தாமதத்தினால் நீண்டு செல்கின்றன அவற்றை விரைவில் முடிவுக்கு கொண்டுவருமாறு ஜனாதிபதியிடம் கோரவுள்ளேன்.

தமது பிள்ளைகள் அல்லது உறவுகள் காணாமல்போன பின்னர் எங்கோ ஓர் இடத்தில் தனிப்பட்ட ரீதியில் கண்டதாக கூறுகின்றார்கள். இது ஒரு முக்கியமான விடயம் தங்களுடைய பிள்ளைகளை காணாமல் போனதாக கூறப்படும் தினத்திலிருந்து நான்கு ஐந்து வருடங்களின் பின்னர் கண்டதாக அத்தாட்சியுடன் படங்கள் வைத்து காட்டுகின்றனர். அவற்றிலிருந்து தடயங்களை எடுத்து விசாரணை செய்ய முடியும். ஜனாதிபதியோடும் நிற்கின்ற பிள்ளைகளும் எங்கோ ஓர் இடத்தில் இருந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கியுள்ள நிலையில், மாதத்துக்கு ஒருமுறை என்ன முன்னேற்றம் நடைபெற்றது என்பது தொடர்பில் ஐ.நா தெரிந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை ஐ.நாவிற்கு தெரியப்படுத்தவுள்ளோம். குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டார் விடயத்தில் என்ன முன்னேற்றம் உள்ளது என்பது கண்டறியப்பட்ட வேண்டும் எனவும் முதலமைச்சர் தனது கருத்தை தெரிவித்தார். (செ-4)

## குடிவரவு குடியகல்வு...

றமை மற்றும் கடவுச்சீட்டு விநியோக செயற்பாடுகள் என்பனவற்றை 1948 இன் குடிவரவு குடியகல்வு சட்டமூலம் பயன்படுத்தப்படுகின்றது.

சர்வதேச நடமாட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும் பெரும்பான்மையான போக்குவரத்துக்கள் கடல் மார்க்கமாக இருந்த காலத்திலும் தற்போதைய சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் குடிவரவு குடியகல்வு முக்கியமான வகிபாகத்தை கொண்டிருக்கிறது.

தற்காலிகமாக தொழிலாளர்கள் புலம்பெயர்தல், வெளிநாட்டு முதலீடு, எல்லை கடந்த வர்த்தகம், சுற்றுலா, கல்வி வாய்ப்புகள் என்பவை பொருளாதாரத்திற்கு பெறுமதியான பங்களிப்பை வழங்குகின்றன.

தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் மேலெழுகையின் விளைவாகவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட சந்தைக் கட்டமைப்புகளினாலும் பொருளாதாரத்திற்கு காத்திரமான பங்களிப்புகள் வழங்கப்படுகின்றன.

அந்தவகையில், தற்போதைய குடிவரவு நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க மீளாய்வு தேவைப்படுவதாகவும் இவை தொடர்பான சட்டமூலமும் மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் அண்மையில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

குடிவரவு எமது தேசிய அடையாளம், தேசிய பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, ஒழுங்கீனமான புலம்பெயர்வு போன்ற விவகாரங்கள் தொடர்பாக கேள்விகளுக்கு பதில்களையும் அந்த அறிக்கை கொண்டிருந்தது.

அத்துடன் ஆட்கடத்தல், சுகாதாரம், பயங்கரவாதம், எல்லை கடந்த குற்றச்செயல்கள், சர்வதேச அரங்கில் எமது வகிபாகம் தொடர்பான விடயங்களும் அந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன.

குடியகல்விற்கு மதிப்பளிக்கும் அதேவேளை உலகமயமாக்கம், பொதுமக்கள் சுற்றுலா, துரித பொருளாதார வளர்ச்சி, வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல், இலத்திரனியல் பயண அங்கீகாரம் உட்பட கையாளப்பட வேண்டிய விவகாரங்கள் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் எல்லைக்கட்டுப்பாடு மற்றும் சர்வதேச சட்டங்களிற்கு அமைவாக செயற்படுதல் என்பவற்றிற்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், இந்த புதிய சட்டமூலத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

காலத்தின் தேவையினை உணர்ந்து பலமான குடிவரவு, குடியகல்வு சட்டத்திட்டங்களை உருவாக்கும் நோக்கில் புதிய இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டத்தினை வரைவதற்கு சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில் உள்விவகார, வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்னவினால் முன் வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களால் இன்றைய தினம் காலை 10.30 மணியளவில் வடமாகாண ஆளுநர் அலுவலக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை உறுதி அளித்ததற்கு அமைவாக விரைவில் வழங்க வேண்டும் என்ற பிரதான கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேற்குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். (செ-9)

## யாழ். இந்து...

பெறுபேறுகள் நேற்று அதிகாலை இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்போது 2016ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் இடத்தையும் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தையும் யாழ் இந்துக் கல்லூரி மாணவன் அபிநந்தன் பெற்றுள்ளார்.

மேற்படி மாணவன் கணிதம், விஞ்ஞான ஒலிம்பியாட் கனிஷ்ட பிரிவுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

## கஞ்சா செடி;...

றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர். வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டவளை சிங்கள வித்தியாலயத்திற்கு அண்மித்த பகுதியிலுள்ள வீட்டு வளாகத்தில் கஞ்சா செடியை வளர்த்து வந்த நிலையிலே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டவளை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, சட்டவிரோதமாக கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இதன் போது 5 கஞ்சா செடிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த இருவரும் தமது வீட்டு முற்றத் தில் கஞ்சாச் செடிகளை வளர்த்து வந்துள்ளதாக வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா செடிகளை அழித்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். (செ-11)

**விற்பனைக்கு** வீட்டுப்பாவனையிலுள்ள (ROBIN EY. 20) நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. **0750709445**

**பதவி வெற்றிடம்**

- கணனி தமிழ் ரைப்பிங்
- பக்க வடிவமைப்பு
- விளம்பர வடிவமைப்பு

(ஆண்கள் இரவுக் கடமை)

அனுபவமுள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன்

**இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரியில் உள்ள வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

**ECONOMICS HALL**
**நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**
A/L 2019
ஆரம்பம் : 01.04.2017 காலை 8.00
**கலை, வர்த்தகம்**
அன்றைய தினம் இணையும் மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் இலவசம்
(8442)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

Courier & Cargo

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Widc Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-7931)

**கணினி திருத்தம்**
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
**GUNA BEST PC 0779086737**
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

**A/L -2019** கலை, தொழில்நுட்ப பிரிவுகள்

**புவியியல் - N.BABU**
(புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

| | |
|---|---|
| **ஆட்ஸ் அக்கடமி - புத்தூர்** ஆரம்பம் : 30.03.2017 (4pm) | **C.A - சுன்னாகம்** ஆரம்பம் : 01.04.2017 (5pm) |
| **தமிழியற் கல்லூரி - கோப்பாய்** ஆரம்பம் : 30.03.2017 (5pm) | **DMI - யாழ்.நகர்** ஆரம்பம் : 01.04.2017 (8am) |

(சி-7940)

## மன்னாரில் பட்...

மன்னார் மாவட்டத்தில் உள்ள வேலையில்லா பட்டதாரிகள் ஒன்றிணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரில் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட வேலையில்லாபட்டதாரிகள் சமூகத்தின் ஏற்பாட்டில் குறித்த கவனயீர்ப்பு பேரணி இடம்பெற்றது. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக காலை 10.30 மணியளவில் ஆரம்பமான குறித்த பேரணி பிரதான வீதியூடாக சென்று மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

இதன்போது பேரணியில் கலந்து கொண்ட நூற்றிற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

பின்னர் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்றுகூடிய பட்டதாரிகள் பல்வேறு கோரிக்கைகளை கோசங்களாக வெளிப்படுத்தினர்.

பட்டதாரிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரியவிடம் பட்டதாரிகள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர். பின்னர் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோருக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 350றக்கும் மேற் பட்ட பட்டதாரிகள் பட்டப்படிப்பை நிறைவு செய்த நிலையில் அரச வேலைவாய்ப்பு இன்றி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
**A/L 2019**
கலை வர்த்தகம் தொழில்நுட்பம்
பிரிவு-11 ஆரம்பம் 01-04-2017 சனி 8.00 மணி

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

**UK-550*/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(சி-7858)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af **பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம். **www.ambafrance-lk.org**



புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 01.04.2017
**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(8436)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 09 . 1928 | 28 . 02 . 2017 |

திருமதி
### வேலுப்பிள்ளை செல்வரத்தினம்

கடந்த 28.02.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த அமரர் வேலுப்பிள்ளை செல்வரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.03.2017) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கல்லூரி வீதி தாமரைக்குளத்தடியிலுள்ள மடத்தில் இடம்பெறும் என்பதனையும், அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் மதியம் 12 மணியளவில் இடம்பெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டு ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓடக்கரை, பருத்தித்துறை. - குடும்பத்தினர்
077 529 6241, 077 108 1232
(8423)

**யாழில் புகழ்பூத்த No-1 நிறுவனம்**
**விக்னா** கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். T.P:077 662 9137

**O/L DAY CLASS**
ஆரம்பம் 03.04.2017 (8.00-2.00)

- எமது நிறுவனத்தில் கற்ற 99% மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்
- அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
- யாழ்.நகரில் O/L DAY CLASS இங்கு மட்டுமே
- இவ்வருடம் பிரிவு 4 மட்டுமே
- அனுமதிகள் இன்று முதல்

2 ஆம் தவணைக்கான 6-O/L வகுப்புக்கள் ஆரம்பம்: 01.04.2017 9.30 மணி
(சி-7939)

**A/L தொழில்நுட்ப பிரிவு**

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**
**ராகவன்** (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**பொறியியல் தொழில்நுட்பவியல்**
**நிரோசன்** B.Sc Engineering (விரிவுரையாளர்)

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்**
**சக்தி** B.Sc, M.Sc (விரிவுரையாளர்)

**விவசாயம்**
**சாரங்கன்** B.Sc in Agriculture (கிளி/மத்திய கல்லூரி)

**புதிய பிரிவு ஆரம்பம் : 01.04.2017**

- குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.
- யாழ்.இந்துக் கல்லூரி அருகாமை
- கொக்குவில் இந்துக் கல்லூரி அருகாமை
- அச்சுவேலி சந்தி, Union Bank
- நெல்லியடி, NSB அருகாமை

**தொடர்புகளுக்கு : 077 326 1648**
(8441)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.